2016 ஆகஸ்ட் 09
செவ்வாய்
விலை: 15/-

ஹிஜ்ரி 1437 துல்கஃதா பிறை 05 பக்கங்கள் 12 மணி 02 ஒளி 121

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

1996 - 2016 நவமணி



அலப்போ வெற்றி சிரியாவில் திருப்புமுனை
07»



உணவின்றி தவிக்கும் பீகார் மக்கள்
10»



கிமிகோவின் ஒலிம்பிக் கனவு தகர்ந்தது
12»

## துருக்கி புரட்சிக்கு எதிராக...»





துருக்கி சதிப் புரட்சிக்கு எதிராக நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தி இஸ்தான்புல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணியில் ஜனாதிபதி அர்தூகான் ஆதரவாளர்களுக்கு கையசைப்பதையும், ஜனாதிபதியின் பாரியார் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் துஆ பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# தேர்தல் தொகுதிகளை 200 ஆக அதிகரிக்குக



சிறு கட்சிகள் சார்பில் ஹக்கீம் கோரிக்கை


அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் ஓர் அங்கமாக அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய தேர்தல் முறை குறித்து சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகள் சார்பில் புறம்பான பிரேரணைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நவமணிக்கு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இயங்கும் அரசியலமைப்பு தொடர்பான செயற்குழு சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளது கருத்துக்களைத் திரட்டி பிரேரணைகளை முன்வைக்கும் பொறுப்பினை அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் ஒப்படைத்துள்ளது.

இதன்படி அமைச்சர் ஹக்கீம் சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளது கருத்துக்களை அறிவதற்கான கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளார்.

தமிழர் கூட்டமைப்பினருடன் ஏற்கனவே உரையாடியுள்ள ஹக்கீம் அடுத்த சில தினங்களில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள், மலையக முஸ்லிம் கட்சிகளது கருத்துக்களை பெறவுள்ளார்.

புதிய தேர்தல் முறையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை 235 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. 11»



## இலங்கை வருகிறார் துருக்கி ஜனாதிபதி

துருக்கி ஜனாதிபதி ரஜப் தய்யுப் அர்தூகான் இலங்கை வரவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.


எதிர்வரும் நவம்பர் மாதம் 17 முதல் 19 வரை பிரதமர் 11»



எட்கா ஒப்பந்தம்:
## இந்திய பிரதிநிதிகள் இன்று இலங்கை வருகை

■ ஆதில் அலி சப்ரி

இலங்கை- இந்தியாவுக்கிடையிலான பொருளாதார, தொழிநுட்ப (எட்கா) ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பாக பேச்சுவார்த்தையொன்றில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று இலங்கை 11»



முஸ்லிம் உலக லீக் பொதுச் செயலாளர் கலாநிதி அப்துல்லாஹ் இப்னு அப்துல் முஹ்ஸின் அல் துர்கி, தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் ஆகியோர் நேற்று தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். முஸ்லிம்களும் சகவாழ்வுக்கான எதிர்பார்ப்பும் என்ற தொனிப்பொருளில் 11,12ஆம் திகதிகளில் நடைபெறும் உலக இஸ்லாமிய கருத்தரங்கில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

## காலி மழ்ஹருஸ் சுல்ஹியாவில் ஜனாதிபதி...»





காலி மல்ஹருஸ் சுல்ஹியா தேசிய பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இதன்போது கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவில் காலி மாவட்டத்தில் 2ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்ட அப்பாடசாலையின் மாணவி எம்.என் பாரா நிபிலாவுக்கு ஜனாதிபதி சிறப்பு பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, முதலமைச்சர் ஷான் விஜயலால் த சில்வா, அமைச்சர் வஜிர அபேவர்தன, பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் தென் மாகாண சபையின் உறுப்பினர், கல்லூரியின் அதிபர் ஐ.எம்.எம் யூஸுப் உள்ளிட்ட பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

## மலேரியா அற்ற நாடாக இலங்கை பிரகடனம்

■ அ.அருண் பிரசாந்த்

இலங்கை வெகுவிரைவில் மலேரியா அற்றநாடாக பிரகடனப்படுத்தப்படும் என்று சுகாதார சேவை பணிப்பாளர் நாயகமான வைத்தியர் பாலித மஹிபால 11»



## காணாமல்போனோர் அறிக்கை அடுத்தவாரம் கையளிப்பு

■ அ.அருண் பிரசாந்த்

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்தவாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. 11»

பொரலஸ்கமுவ பள்ளி தாக்குதல்:
## சி.சி.ரீ.வி. பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவு





■ ஆதில் அலி சப்ரி

பொரலஸ்கமுவ பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் தொடர்பான சி.சி.ரீ.வி. காட்சிகளை பெற்றுக்கொள்ள இன்று நீதிமன்ற உத்தரவை பெறவுள்ளதாக பொரலஸ்கமுவ 11»

## எஸ்.ரீ.எப். தளபதியாக லத்தீப் நியமனம்



■ பீ.எப்.எம். றிஷாட்

பொலிஸ் விசேட அதிரடிப்பிரிவின் கட்டளை தளபதியாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லத்தீப் இன்று நியமிக்கப்படுவார் என பொலிஸ் ஆணையகம் அறிவித்துள்ளது.

அத்துடன் பொலிஸ் பிரிவுக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வது மற்றும் அவர்களை பயிற்றுவிப்பது தொடர்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும் 11»

விடுதலையை வலியுறுத்தி
## அரசியல்கைதிகள் உண்ணாவிரதம்

■ அ.அருண் பிரசாந்த்



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தம்மை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுதல் மீண்டும் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 99 தமிழ் அரசியல் கைதிகளே இந்த 11»

# இறப்பர் தொழிற்துறையை நவீனமயப்படுத்த அமைச்சின் மூலம் பாரிய திட்டங்கள்

## அமைச்சர் றிஷாத் பதியுதீன்

இறப்பர் தொழில்துறையினை நவீன மயப்படுத்த நாம் கடினமான சிரமங்களை எதிர்கொள்கிறோம். உலக சந்தையின் நிலைமை, வழங்கல் துறையில் காணப் படுகின்ற தடைகள், தொழில்நுட்பக் குறைபாடு போன்றவை எமக்கு பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. மேலும் இத்துறையின் வளர்ச்சிக்கு செயற்கை இறப்பர் இறக்குமதி மீதான இடர்பாடுக ளும் தீர்க்கப்பட வேண்டும் என கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீன் வலியுறுத்தினார்.

கடந்த வாரம் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் கண்காட்சி யின் மூன்றாவது பதிப்பின் அங்குரார்ப் பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக்கொணடு உரையாற்றும் போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் அரிந்தம் பாச்சி , இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத் தின் தலைவர் எம்.டி. பிரின்ஜிரஸ் மற்றும் உப தலைவர் கவுஷால் ராஜபக்ஷ உட் பட பல பிரமுகர்கள் இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இம்முறை இத்தொடர் கண்காட்சி அதன் அசலில் இருந்து விரிவடைந்துள்ளது. பொதியிடல் மற்றும் உற்பத்தி துறையினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இக்கண்காட்சிக்கு இணையாக நான்கு நிகழ்வுகள் இவ்வருடம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் தொழில் உரிமையாளர்கள் மற்றும் அதன் தலைமை நிர்வாக அதிகாரிகள் தொடர்ந்தும் இக்கண்காட்சி தொடரில் கலந்து கொள் கின்றனர். இவ்வாண்டு இக்கண்காட்சியில் இந்தியா, சீனா, தைவான் மற்றும் ஜெர்மன் போன்ற நாடுகள் பங்கு பெறுகின்றன. இந்நிகழ்வில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் ,

எமது இறப்பர் தொழில்துறை உற்பத்திக்கு வலுவான கேள்வியுள்ளது. இறப்பர் எங்கள் பிரதான ஏற்றுமதி களில் ஒன்றாகும். இது உள்ளூர் உற்பத்தி துறையிலும் பயன்படுகிறது. ஆண்டு தோறும் சுமார் 195 மில்லியன் அமெ ரிக்க டொலர் பெறுமதியான இறப்பரை உள்ளூர் உற்பத்திக்காக எடுத்துக்கொள்ளப் படுகின்றது. எங்கள் அமைச்சின் தகவலின் படி 485 இறப்பர் தயாரிப்பு உற்பத்தியாளர்கள் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர். சிலர் எத்தகைய பதிவுகளும் இன்றி இத்தொழிலில் ஈடுபடுகின்றனர் என நம்பப்படுகின்றது. இது எங்கள் இறப்பர் தயாரிப்பு உற்பத்தியினை பாதிப்படைய செய்கிறது. விரைவில் அவற்றை நிவர்த்தி செய்ய தேவையிருக்கிறது, இது தொடர்பில் எனது அமைச்சும் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

உண்மையில் அரசாங்கத்தின் இறப்பர் தொழில்துறை மீதான பாரிய பெருந்திட்டம் ஆரம்பமாகியுள்ளது. இறப்பர் துறையின் ஒட்டுமொத்த 25 பாரிய பெருந் திட்டங்களில் 12 திட்டங்கள் கூட்டுமுயற்சியுடன் செயல்படவுள்ளமை குறித்து எனது அமைச்சு பெருமையடைகிறது. இறப்பர் தொழில்துறை மீதான தகவல் குறைபாடு எங்கள் அபிவிருத்தி முயற்சிகளில் ஒரு முக்கிய பிரச்சி னையாக காணப்படுகின்றது. நாம் தற்போது தகவல்களுடன் எமது



செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம். எனவே இது சம்பந்தமாக தற்போது நாடு தழுவிய ரீதியில் ஆய்வொன்றினை செயல்படுத்தி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க எதிர்பார்க்கின்றோம். மற்றொரு திட்டம் இறப்பர் உற்பத்தி திறன் மீது காணப்படுகின்ற பற்றாக்குறை சம்பந்த மானது. வளர்ந்து வரும் இத்தொழில் துறையில் திறமையான தொழில் நுட்ப திறன் அறிவு இல்லாமை ஒரு பிரச்சினையாக உள்ளது.

பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் தொழில்நுட்ப அறிவு தொடர்பான இந்திய பல்கலைக்கழகத்துடன் இந்த பிரச்சினையினை எனது அமைச்சு, இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து தீர்வு காண வேண்டும். பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி தொடர்பில் தெற்காசியாவில் பிரபல்யமான, கேரளாவில் அமைந்துள்ள இந்தியா - கொச்சின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சி தொடர்பான எமது கோரிக்களை விடுத்தோம். இப்பல்கலைக்கழகம் சாதகமாக எங்கள் கோரிக்கையினை ஏற்றுக்கொண்டுள்ளது. இதன் விளைவாக எனது அமைச்சு இலங்கையில் இருந்து 25 இறப்பர் தொழில்நுட்ப வல்லுனர்களை நவீன இறப்பர் தொழில்நுட்ப பயிற்சிக்கு எதிர்வரும் மாதம் கேரளாவுக்கு அனுப்ப வுள்ளது. மற்றொரு முயற்சியாக, பிளாஸ்டிக் மற்றும் இலங்கை இறப்பர் நிறுவனம் 25 மாணவர்களுக்கு இறப்பர் தயாரிப்பு உற்பத்தி திறன் தொடர்பான பட்டப்படிப்பு திட்டத்திற்கு ரூ 3.7 மில்லியன் நிதியினை ஏற்பாடு செய்திருக்கின்றது. இத்தொழில்நுட்பம் தாய்வான் இருந்து பெறப்பட்டது. இதன் விளைவாக இறப்பர் அச்சு சோதனை உபகரணங்கள் அணுகல் இல்லாமை எதிர்கொண்ட பிரச்சினை நிவர்த்தி செய்யபட்டது. இப்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினரின் தொழிற் சாலைகளினை மிக வேகமாக முன் னோக்கி நகர்த்த முடியும். எதிர்காலத்தில் நாம் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு இலங்கை இறப்பர் தொழில் துறையை மேம்படுத்த எதிர்பார்க் கிறோம் என்றார்.



தஸ்பீஹ் வொலன்டியர் அமைப்பு ஒற்றுமையே பலம் என்ற தொனிப்பொருளில் இளைஞர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கொன்றை அண்மையில் தெஹிவலை ஸைனப் மஸ்ஜிதில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் வளவாளராக கலந்துகொண்ட அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் மற்றும் இளைஞர்களில் ஒரு குழுவினரை படத்தில் காணலாம்.

# புழுதிவயல் பல் வைத்தியசாலையில் பல் சிகிச்சைக்குரிய உபகரணங்கள் இல்லை

(பாலாவி நிருபர் ஏ.ஏ.முனாப்)

முந்தல் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த புழுதி வயல் பல்வைத்தியசாலை யில் சிகிச்சைக்குரிய போதியளவு உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் பல் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சிகிச்சை க்குரிய போதியளவு உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் புத்தளம் தள வைத்தியசாலைக்கு சென்று வரிசையில் நின்று பல மணித்தியாலங்களாக நின்று சிகிச்சை மேற்கொள்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் நடவடிக்கை இவ்வைத்தியசாலைக்கு போதியளவு உபகரணங்களை தருவிக்குமாறு இப்பிரதேச வாழ் பல் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# தம்புள்ள விபத்தில் இருவர் உயிரிழப்பு

(மொஹொமட் ஆஸிக்)

தம்புள்ளை வேவல பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 7.20 மணியளவில் வேவல பிரதேசத்தில் இருந்து தம்புள்ளையை நோக்கிச் சென்ற பெகோ இயந்திரம் ஒன்று தம்புள்ளை பிரதேசத்தில் இருந்து வேவலையை நோக்கி வந்துள்ள மோட்டார் சைக்கி ளொன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் கடும் பாயங்களுக்கு உள்ளாகியுள்ள மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தம்புள்ளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் தம்புள்ளை கண்டலம பிரதேசத்தை சேர்ந்த நுவன் சமிந்த பாலசூரிய ( 26 வயது) சுசந்த பிரதீப் (26 வயது) ஆகிய இருவரும் ஆவார்கள். இவ் விபத்து தொடர்பாக மேலதிக விசரணை களை தம்புள்ளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

# அநுராதபுரம் மாவட்ட தமிழ் பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்திக்க நிதி ஒதுக்கீடு

(நாச்சியாதீவு பர்வீன்,
இப்பாலோக நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் பௌதீகவளக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக அநுராதபுரம் மாவட் டப் பாராளுமன்ற உறுப்பினர் இஸ்ஹாக் ரஹுமானின் வேண்டுகோளிற்கு இணங்க கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவச த்தின் ஏற்பாட்டில் அநுராதபுரம் மாவட் டத்தில் உள்ள 04 கல்வி வலயங்களில் உள்ள 30 தமிழ் மொழிப் பாடசாலைக ளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்ட தமிழ் மொழிக்கல் வியை வளர்ப்பதே தனது பிரதான நோக்கம் என தேர்தல் காலத்தில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித் திருந்தார். அநுராதபுரம் கல்வி வலயம் இக்கிரிகொல்லாவ மு.ம.வி -51 மில்., நாச்சியாதீவு மு.வி- 02 மில். நொச்சியா கம மு.வி - 02 மில்., அனுத்கம தாருஸ்ஸலாம் மு.வி-0.5 மில்., இஹலகொடியாவ மு.வி-0.5 மில். மனாருல் உலூம் மு.வி- 05 மில்., கிவுலேகட மு.வி- 0.5 மில்., கலென்பிந்துனுவ கல்வி வலயம், முக்கிரியாவ மு.வி -40 மில்., கனந்தரா கட்டுகெலியவ மு.வி 05 மில்., ஈதல்வெட்டுனுவெவ மு.வி-02 மில்., கஹடகஸ்திகிலிய மு.வி-05 மில்., கஹடகஸ்திகிலிய ஆ.பா.-12.5 மில்., நெலுகொல்லாகட மு.வி ல. -0.5 மில்., ஹெட்டியாவ மு.வி 0.5 மில்., தானக்காவ மு.வி-0.5 மில்.

கெப்பிதிகொல்லாவ கல்வி வலயம் கெப்பிதிகொல்லாவ மஹ்மூத் மு.வி -07 மில். அங்குநொச்சிய மு.வி.-52 மில்.- மதவாச்சி மு.வி- 02மில்.,ஹொரவ பொதான முஸ்லிம் ஆ.பா -12.5 மில்.,கல்கடாண்டுவ மு.வி -0.5 மில்.

கெக்கிராவை கல்வி வலயம் கலாவெவ மு.ம.ம.வி-54 மில்., கெக்கிராவை மு.வி.-02 மில்., பமுனுகம மு.வி. -17 மில்.,கனேவல்பொல மு.வி. - 37 மில்., கட்டுகெலியவ முஸ்லிம் ஆ.பா.-12.5 மில்., புதிய தென்னாவை அன்னூர் ஆ.பா. -0.5 மில். நேகம மு.வி-14 மில்.,அல் அஸ்கர் மு.வி. கட்டியாவ-0.5 மில்.,கடாண்டுகம ஜாயா மு.வி.- 40 மில்., பலளுவெவ மு.வி. -02 மில். மீதியுள்ள பாடசாலைகளுக்கான நிதியொதுக்கீடு 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படும் என பாராளமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் இதன்போது தெரிவித்தார்.

# பொலன்னறுவை மாவட்டத்தில் உணவுபயிர் செய்கையில் ஆர்வம்

(பொலன்னறுவை நிருபர் ஏ.றபீக்)

பொலன்னறுவை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட மேட்டுக்காணி களில் உணவுப்பயிர்ச் செய்கையில் பலர் மிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பயறு, உழுந்து, சோளம், மிளகாய், தக்காளி, நிலக்கடலை போன்ற பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.முஸ்லிம், தமிழ் மக்கள் வசித்து வரும் பல கிராமங்களில் நிலக்கடலை உழுந்து, சோளம் ஆகிய தானிய வகைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. வீட்டுத்தோட்ட பயிர்செய்கை யில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பல வகைப்பட்ட விதைகள் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றது. பயிர்செய்கை சம்பந்தமான அறிவூட்டல்க ளும் விவசாயபோதனாசிரியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. போகஹாதமன, நுககஹதமன ஆகிய கிராமங்களில் உழுந்து செய்கை அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பொல்வத்தையில் தாருல்உலூம் கல்லூரி



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

வெல்லம்பிட்டி பொல்வத்தை மஸ்ஜிதுல் நூர் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அருகில் அமையவிருக்கும் மத்ரஸதுல் தாருல் உலூம் அல்- அஸ்ஹரியா கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை (06) இடம்பெற்றது. மத்ரஸதுல் தாருல் உலூம் அல்- அஸ்ஹரியா பல்கலைக் கழகத்தின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி அப்துல் ஜப்பார் (பாரி) மற்றும் பொல்வத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் முஹமட் இர்பான் ஆகியோர் தலைமையில் இவ்விழா இடம்பெற்றது.

இதன்போது புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை கொழும்பு மர்கஸ் பள்ளிவாசல் மத்ரஸாவின் பணிப்பாளர் மௌலவி அபுல் ஹஸன் உள்ளிட்ட பிரமுகர்களால் அடிக்கல் நடப்பட்டதுடன் துஆப் பிரார்த்தனையை மௌலவி அப்துல் ஜப்பார் (பாரி) வழங்கினார். மேற்படி மத்ரஸாவின் கட்டிட வேலைகளுக்கு ஒவ்வொருவரும் முடிந்த உதவிகளை வழங்கி அதில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

# பஸ்சேவை ஆரம்பிக்க மக்கள் வேண்டுகோள்

(நிந்தவூர் நிருபர்)

அக்கரைப்பற்றிலிருந்து காரைதீவு வழியாக அம்பாறைக்கான நேரடி பஸ்சேவை ஆரம்பிக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். கடந்த காலங்களில் அக்கரைப்பற்றிலிருந்து காரைதீவு வழியாக அம்பாறைக்கான நேரடிப் பஸ் சேவையை அக்கரைப் பற்றுச்சாலையே நடாத்தி வந்தது. அப்போது நிந்தவூர் அட்டகப்பள்ளம், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அம்பாறை ஹாடிக்கல்லூரி செல்லும் மாணவ மாணவிகள் அம்பாறை பொதுச்சந்தை செல்லும் வியாபாரிகள் மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் அம்பாறை நீதி மன்றம் மற்றும் கச்சேரியில் கடமைபுரியும் உத்தியோகஸ்தர்களும் சிரமமின்றி பயணத்தை மேற்கொண்டனர். இச்சேவை தற்போது இடம்பெறுவதில்லை. இதனால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த மேற்படி பயணிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே பயணிகள் நலன் கருதி இச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க உரியவர் கள் கவனம் செலுத்த வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்விசாரா ஊழியர்கள் பணிபகிஷ்கரிப்பு அமைச்சு உறுதியையடுத்து நிறைவு

(பா.மலரம்பிகை)

தமது கோரிக்கைகளை அடுத்த வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடக்குவதாக அரசு தெரிவித்ததையடுத்து தம்மால் மேற்கொள்ளப்பட்ட தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிடுவதாக அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சங்கம் நேற்று அறிவித்தது.

அத்தோடு, இதுதொடர்பில் அரசினால் எழுத்துமூலமான உறுதிப்படுத்தலும் குறித்த அமைப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊக்குவிப்புத் தொகையை வழங்க வேண்டும், மொழித்திறனுக்கு ஏற்ப சம்பளம் வழங்க வேண்டும் போன்ற 7 பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜுலை 27 ஆம் திகதி அனைத்து பல்கலைக்கழக கல்விசார ஊழியர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

13 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் கடந்த 12 நாட்களாக மேற்கொண்டுவந்த இப்போராட்டத்தால் பல்கலைக் கழகத்தின் பரீட்சைகள் உள்ளிட்ட பல செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்தன.

இந்நிலையில், நேற்று காலை உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுடன் மேற்கொண்ட பேச்சினைத் தொடர்ந்தே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. இதுதொடர்பில் அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் மாநாடு உயர் கல்வி அமைச்சில் இடம்பெற்றபோது கலந்து கொண்டிருந்த அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சங்கத்தின் இணைத்தலைவர் எட்வட் மல்வத்துகே,

அரசுடன் செய்துகொண்ட பேச்சு எமக்குத் திருப்தியளித்துள்ளதால் எமது போராட்டத்தை நாம் நேற்று முதல் நிறுத்திக்கொண்டோம்.

எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசு எழுத்து மூலமாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அத்துடன், இந்தக் கோரிக்கைகளை அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கவும் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே, எமது இந்தப் போராட்டத்தைக் கைவிடுகிறோம் என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இவர்களது கோரிக்கைகள் தொடர்பில் இதற்கு முன்னரே இணக்கம் ஏற்பட்டுவிட்டது. எனினும், தற்போதே எழுத்து மூலமாக இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமாக இருந்தது என்று கூறினார்.





பாகிஸ்தான் விமானப்படை தளபதி எயார் சிப் மார்சல் சொஹல் அமான் நேற்றைய தினம் இராணுவ தலைமையகத்தில் இராணுவ தளபதி லுதினன் ஜெனரால் கிரிஷாந்த டி சில்வாவை சந்தித்தார். பாகிஸ்தான் விமானப்படை தளபதி இலங்கை முப்படைத் தளபதிகளை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடாத்தினார். பாக்கிஸ்தான் தளபதிக்கு செங்கம்பள வரவேற்பு மற்றும் இராணுவ மரியாதை வழங்கப்பட்டதோடு, இராணுவ காரியாலயத்தில் வரவேற்கப்பட்டு முக்கிய பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டார்.

## தூறியன் பழங்கள் மலிவு விலையில்

(வடதெனிய முஹம்மத் தாஷிந்)



மலைநாட்டின் பல பகுதிகளிலும் தூறியன் பழ உற்பத்தி அதிகரித்துள்ளதனால் குவியல் குவியலாக விற்பனைக்கு வந்துள்ளன.

500 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட தூறியன் பழங்கள் இப்போது 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

## துப்பாக்கிச் சூட்டில் பெண் பலி

வெலிஅத்த பகுதியில் 40 வயதான பெண்ணொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இசுருபுர - லங்கானந்த மாவத்தையைச் சேர்ந்த பெண்ணே நேற்று காலை இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகியுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, காயமடைந்த அவர், வெலிஅத்த ஹக்போதிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னரே பலியாகியுள்ளார்.

காணிப் பிரச்சினை தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு காரணம் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இது குறித்த மேலதிக விசாரணைகளை வெலிஅத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த கொரிய நாட்டின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆசிய மன்றத்தினர் மத்தியில் உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் உரையாற்றிக் கொண்டிருப்பதையும், ஆசிய மன்றத்தின் கொரிய நாட்டு வதிவிடப் பிரதிநிதி டைலான் டேவிஸ்ஸுக்கு உபவேந்தர் நினைவுப்பரிசு ஒன்றை வழங்குவதையும் ஆசியமன்றத்தினரோடு பல்கலைக்கழக கல்வியியலாளர்களையும் படங்களில் காணலாம். (படம் - பஷுர்)

## சிறைக்கைதிகளுக்கான விசேட குழு நியமனம்

(பீ.எப்.எம் றிஷாட்)

மரண தண்டனை நியமிக்கப்பட்டும், வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனை அனுபவித்தும் வருகின்ற சிறைக்கைதிகளின் தண்டனைக்காலத்தை குறைப்பது உள்ளிட்ட சிறைச்சாலைகள் திணைக்களம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு சிறைச்சாலைகள் மற்றும் நீதிமன்ற அமைச்சர்களின் தலைமையிலான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நீதித்துறை மற்றும் நீதிமன்ற அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன, பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சீ.ஞானசோதி மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான் தனசிங்க ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில் தற்போது நிலவி வருகின்ற இடநெருக்கடியைக் கட்டுப்படுத்தவும், சிறைக் கைதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட அவர்களின் மனநிலையை அபிவிருத்தி செய்யவும் விசேட செயற்திட்டங்களும் நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் சிறைக்கைதிகளின் தொழில் நிபுணத்துவ அறிவினை வளர்த்தல், அவர்களது திறமைகளுக்கு முன்னுரிமை வழங்குதல் உள்ளிட்ட சிறைக்கைதிகள் தொடர்பில் நிலவுகின்ற பல்வேறு காரணங்கள் இவ்விசேட குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்படவுள்ளதுடன், இதுதொடர்பில் அரசாங்கத்துக்கு விசேட அறிக்கையொன்றையும் சமர்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச தரத்தினாலான சிறந்ததொரு சிறைச்சாலைகள் கட்டமைப்பை இந்நாட்டில் ஸ்தாபிப்பது இக்குழுவின் பிரதான குறிக்கோளாக அமையவுள்ளதுடன், சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலைகள் அதிகாரிகளின் பிரச்சினைகளுக்கும் முன்னுரிமை அளிப்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சமாக அமையவுள்ளது.

இதேவேளை, தற்போது நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 7,976 ஆண் சிறைக்கைதிகளும், 265 பெண் சிறைக்கைதிகளும் ,313 மரண தண்டனை கைதிகளும், 442 வாழ்நாள் சிறைக்கைதிகளும் இருப்பதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நீதிமன்ற அமைச்சக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் கடும் வரட்சி

(பாலாவி நிருபர் ஏ.ஏ.முனாப்)

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடும் வரட்சி காரணமாக மீள்குடியேற்றம் மற்றும் கிராமப் புறங்களில் வசிக்கும் மக்கள் குடிநீரை பெற்றுக்கொள்வதில் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது சோலக் காற்று கடுமையாக வீசி வருகிறது. இதன் காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



கம்/கஹட்டோவிட்ட முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவி முஹம்மத் அனஸ் பாத்திமா சஹ்மா அகில இலங்கை சமூக விஞ்ஞான போட்டியில் மூன்றாமிடம் பெற்று பாடசாலைக்கு புகழீட்டிக் கொடுத்துள்ளார். வெற்றியீட்டிய மாணவி சஹ்மா சமூக விஞ்ஞான பாட ஆசிரியை எம்.எல்.பாத்திமா பரீனா(இடம்) வித்தியாலய அதிபர் எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா(வலம்) ஆகியோருடன் காணப்படுகின்றார்.

## பிரபல நடிகர் நந்தசிறி மரணம்



இலங்கையின் பிரபல நாடக நடிகரும், கலைஞருமான விஜய நந்தசிறி தனது 72 ஆவது வயதில் நேற்று காலமானார்.

திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.

1944ஆம் ஆண்டு விஜய நந்தசிறி பிறந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேடை நடிகராக தனது நடிப்பை ஆரம்பித்த விஜய நந்தசிறி, இலங்கை திரையுலகில் புதுமையான மற்றும் அற்புதமான நகைச்சுவை கலைஞராக திகழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம், தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராக தமது ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டத்தக்கது.

நோனாவருனி மஹத்துருனி, இயஸ் போஸ் ஆகிய பிரபல தொலைக்காட்சி நகைச்சுவை தொடர்களில் நடித்து மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார்.

## சர்வதேச ஆய்வு மாநாடு 12,13 யாழில்

2016 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பசுமையான எதிர்காலத்தை நோக்கி எனும் கருப்பொருளின் கீழ் குறித்த மாநாடு ஆரம்பிக்கப்படவுள்ளது. வெவ்வேறு துறைகள் சார்ந்தும் சூழல் குறித்த கரிசனைகளை தனது ஆய்வுப்பகுதிக்குள் உள்ளடக்கியிருப்பது இந்த மாநாட்டின் சிறப்பாகும்.

இந்த மாநாட்டிற்கான 74இற்கும் அதிகமான ஆய்வுக்கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, பெருமளவிலானவை வெளிநாடுகளிலிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன.

இரண்டு நாட்கள் நடைபெறவிருக்கும் குறித்த மாநாட்டில் இதுவரை 150க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் தமது பதிவை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை, மாநாட்டின் ஆரம்பதினத்திலும் பங்கேற்பு பதிவுகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரேச்சல் றிரைட் தொடக்கவுரையை நிகழ்த்தவுள்ளதோடு, அமெக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ரஞ்சித் கூடாலி மற்றும் கலாநிதி ஆறுமுகம் கந்தையா ஆகியோர் உரைகள் வழங்கவிருக்கின்றனர்.

## உப்பின் அளவும் எதிர்வரும் நாட்களில் அளக்கப்படும்

குளிர்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவைக் குறித்துக் காட்டும் சமிக்ஞைக் குறியீடுகளைப் போன்று, சந்தையில் விற்பனைக்குள்ள உணவுப் பொருட்களின் அளவையும் குறித்துக் காட்டக்கூடிய முறையொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

இதேவேளை, குளிர்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவைக் குறித்துக் காட்டும் லேபல்களை ஒட்டத் தவறியவர்களுக்கு எதிராக, எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்த அவர், அது தொடர்பான சுற்றிவளைப்புத் தேடுதல்களை, எதிர்வரும் இரு வாரங்களில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
09TH AUGUST 2016 - TUESDAY

# வழக்குகள் தாமதத்துக்கு முற்றுப் புள்ளி தேவை!

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் அலுவலக தாமதங்கள் குறித்து ஆராய்வதற்காக, அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, நீண்ட காலம் தேங்கி நிற்கும் வழக்குகளை, மிக துரிதமாக இரண்டு, மூன்று வாரங்களுக்குள் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றுக்குக் கொண்டு வருவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இந்தத் தாமதங்களை நிவர்த்திப்பதற்கான ஒரு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவோம் என்று கூறியுள்ளார்.

அத்தோடு, முன்பு, சட்டமா அதிபர் திணைக்களம் முன்னாள் ஜனாதிபதியின் செல்வாக்கின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் காரணமாக நீதித் துறையில் அரசியல் தலையீடு நிகழ்ந்தது. இந்த நிலையை நாம் மாற்ற முயற்சிக்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குழுவில் அமைச்சர்களான சுசில் பிரேம்ஜயந்த், ரவூப் ஹக்கீம் மற்றும் டி.எம். சுவாமிநாதன், ஐ.தே.க. தேசியபட்டியல் பா.உ. திலக் மாரபண, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோர் உள்ளடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மட்டுமல்லாது தெற்காசிய பிராந்தியத்தினதே நீதித் துறை மிகவும் மந்தமாக செயற்படுகின்ற நிலையில், அமைச்சர்களின் இந்தத் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியதாகும். இருப்பினும், வெறுமனே குழு அமைப்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல், மிக வினைத்திறனாக செயற்படும் பொறுப்பும் இக்குழுவுக்கு உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில், இலங்கையின் நீதித் துறையில் அரசியல் தலையீடு நிகழ்ந்தமை குறித்து பொது மக்கள் மத்தியில் பெரும் விசனம் நிலவியது. சட்டமா அதிபர் சிராணி பண்டாரநாயக பலவந்தமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டமை, வசீம் தாஜுடீனின் கொலை குறித்து மூடிமறைப்புக்கள் என்று இப்பட்டியல் தொடர்கின்றது.

அரசியல் ரீதியான பின்னணிகளைக் கொண்ட இந்நிகழ்வுகள் ஒருபுறமிருக்க, சாதாரண பொது மக்களோடு தொடர்புபட்ட ஏனைய சட்டத்துறை சார் முன்னெடுப்புக்களும், வழக்குகளும் கூட தாமதிக்கப்படுவதால், அன்றாடம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலைக்கு பொது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நீதிமன்றுக்கு சென்று நீதியை கேட்டு நிற்பதை விட, நமக்கு நடந்த அநியாயங்களை மறந்து விட்டுப் போகலாம் எனும் நிலைக்கு பொது மக்களது மனப்பாங்கு பரிணாமம் பெற்றுள்ளது. ஏனெனில், தமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று நீதிமன்றுக்கு சென்றால், தம் வாழ்நாளில் பெரும் பகுதியை வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களில் செலவிட வேண்டும் என்ற யதார்த்தம் மக்களை இப்படி நினைக்கச் செய்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் தந்தை தொடர்ந்த வழக்கை, தந்தை இறந்த பின் மகன் தொடருகின்ற நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே, நாடு பூராகவும் நீதிமன்றங்களில் தேங்கி நிற்கும் வழக்குகள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தி, மக்களின் நேர விரயத்தை குறைப்பது குறித்தும் இக்குழு மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

---

**தமிழில்: அஷ்கர் தஸ்லீம்**

**தேசிய ஐக்கியத்துக்கான மன்றம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவுக்கு வெள்ளவத்தை எக்ஸலன்ஸி மண்டபத்தில் நடத்திய பாராட்டு உபசாரத்தின்போது அமைச்சர் ஆற்றிய உரை**

# இலங்கையர் என்ற அடையாளத்துடன் அனைவரும் ஒன்றுபடவேண்டும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன



இந்த மதிப்புமிக்க நிகழ்வில் நான் பாராட்டப்படுவதன் மூலம் நான் உண்மையில் கௌரவிக்கப்படுகிறேன். இப் பெரும் நிகழ்வில் சில வார்த்தைகளை பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தேசிய ஐக்கியத்துக்கான மன்றத்தின் தலைவர் என்.எம். அமீன் மற்றும் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்.எம். அமீன், நாம் அனைவரும் அறிந்திருப்பதுபோல் ஒரு முன்னணி ஊடகவியலாளர் மட்டுமல்ல, அவர் ஐக்கியம், சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை ஆதரித்துப் பேசும் ஒருவருமாவார். தேசிய ஐக்கியத்துக்கான மன்றத்தின் தலைவராக இருப்பதன் மூலம், எமது நாட்டு சமூகங்களுக்கு மத்தியில் சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம், எமது நாட்டுக்கு பெரும் சேவையை அவர் செய்துள்ளார்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி அறிமுகம் தேவையற்ற ஒருவர். இலங்கையின் மிகவும் சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சரான அவர், அவரது பொது வாழ்வை, அவரது நாட்டுக்கும், அவரது சமூகத்துக்கும் சேவை செய்வதற்காக அர்ப்பணித்துள்ளார். 1959 இல் அவர் அரசியலுக்கு நுழைந்தது முதல், இலங்கை முஸ்லிம் சமூகத்தை உயர்த்தி விடுவதற்காக அயராது விடாமுயற்சியுடன் செயற்பட்டிருக்கிறார் அவர். வயதில் என்னை விட இரு மடங்காக உள்ள போதும், எமது பாராளுமன்றத்தில் களங்கமில்லாத அரசியல்வாதியாக அவர் உள்ளார். அவரும் நானும் வித்தியாசமான, பல நேரங்களில் எதிர்த்தரப்பு நிற்கும் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். ஆனாலும், நான் எப்போதும் மெச்சுகின்ற, மிகவும் மதிக்கின்ற ஒரு அரசியல்வாதியே அவர் என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் குறித்த அமைச்சர் பௌஸியின் விவகாரம் சவால் நிறைந்தது மாத்திரமன்றி, நம்மை 26 வருடங்களாகக் கொடுமைப்படுத்திய கொடிய சிவில் யுத்தத்தின் முடிவைப் பார்த்த நம் நாட்டின், எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். ஒரு காலத்தில் அமைதியாக இருந்த நம் நாட்டில் இந்த யுத்தம் மூலம் இந்த நாட்டின் சமூக கட்டுமானம் சிதைந்து போயிருந்தது. சமூகங்கள் துருவ நிலையை அடைந்து, பிரிந்து போயின. அச்சத்தினதும், சகிப்பின்மையினதும், நம்பிக்கையீனத்தினதும் விதைகள் விதைக்கப்பட்டிருந்தன.

அக்காலத்தில், நம் வாழ்வின் பெரும்பாலான பகுதியை அச்சத்துடனேயே கடத்தினோம். சொல்ல முடியாத துன்பங்களையும், பேரழிவுகளையும் கொடூரங்களையும் அந்த யுத்தம் நமக்கு ஏற்படுத்தியது. இரத்தம் தோய்ந்த இந்த நெருக்கடியினால், அனைத்து இனங்களையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான அப்பாவி உயிர்கள் பாதிக்கப்பட்டன. எந்தவொரு நெருக்கடியின்போதும், இறுதியில் பாதிக்கப்படுவது அப்பாவி ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமே. இதிலிருந்து எந்தவொரு சமூகமும் தப்பிக்கவில்லை. அரந்தலாவையில் வாகனங்களிலிருந்த பௌத்த பிக்குகள் எல்.ரீ.ரீ.ஈயினரால் படுகொலை செய்யப்பட்டது முதல் கறுப்பு ஜூலை இனக் கலவரத்தின்போது உயிர்களையும் சொத்துக்களையும் உடைமைகளையும் இழந்த அப்பாவி தமிழ் குடும்பங்கள், காத்தான்குடி பள்ளிவாயலில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின்போது நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பக்தர்கள் தமது உயிர்களை இழந்தது, வத்தளை புனித அன்னம்மாள் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதல் வரையிலும் அனைத்து இனத்தவர்களும் இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டனர். இந்த வன்முறை அலையினால் எல்லா இன மதத்தவரும் பாதிக்கப்பட்டனர். அமைச்சர் பௌஸியும், அகுரெஸ்ஸயில் நடைபெற்ற ஒரு முஸ்லிம் மத நடைவபனியின்போது மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பினார்.

நாம் நீண்ட நாள் எதிர்பார்த்திருந்த சமாதானத்தை, எமது பாதுகாப்பு படைகளின் வீரத்தின் காரணமாக, நாம் அடைந்து கொண்டோம். நம்பிக்கையீனம், சந்தேகம் ஆகிய சுவர்களை உடைத்தெறிந்து இந்த நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களையும் ஒற்றுமைப்படுத்தக்கூடிய பொன்னான சந்தர்ப்பம் தற்போது நமக்கு கிடைத்துள்ளது. எவ்வாறாயினும், யுத்தத்தின் வடுக்கள் ஆழமாக ஊடுருவியுள்ளதால், ஒரு யுத்தத்தை வெற்றி கொள்வதன் மூலம் மாத்திரம், முடிவுறாத சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. எமது நாட்டின் ஒற்றைத்தன்மையை பாதுகாப்பதற்கு, எமது படையினர் தமது உயிர்களை அர்ப்பணித்து யுத்தம் செய்தனர். அவர்கள் எமக்காக பெற்றுத் தந்த சமாதானத்தை பாதுகாப்பதும் பேணுவதும் நமது பொறுப்பாகும். நெருக்கடி காலத்தின்போது நாம் அனுபவித்தவற்றை, எமது எதிர்கால சந்ததி அனுபவிக்கக்கூடாது என்பதை நாம் எல்லா வகையான வழிமுறைகளின் மூலமும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அனைத்து சமூகங்களையும் இணைப்பதற்கு முறையான நல்லிணக்க பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமல் போயின், நாம் இன்று அனுபவிக்கும் சமாதானம் தற்காலிகமானதாக மாறிப்போகும். நல்லிணக்கத்தின் மூலம் மட்டுமே, யுத்தத்தின் வடுக்களை ஆற வைக்கவும், எல்.ரீ.ரீ.ஈ அல்லது வேறு ஆயுதக் குழுக்களின் உருவாக்கத்தை தடுக்கவும் முடியும். நல்லிணக்கம் தேவையில்லை என்றும், காலப் போக்கில் இக்காயங்கள் ஆறிப் போகும் என்றும் நாம் நினைப்போமாயின், ஆம், மேற்பரப்பில் காயங்கள் ஆறிப் போகும். ஆனால், காயத்தின் வடுக்கள் அப்படியே காணப்படும். பின்னர், அந்த வடுக்கள் அடியில் புதைந்து வதைத்து, இறுதியில் மாபெரும் சக்தியுடன் மீண்டும் எழும் என்பதை மாத்திரமே என்னால் சொல்ல முடியும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையிலான ஐக்கிய அரசாங்கம், முறையான நல்லிணக்க பொறிமுறையொன்றின் மூலம் இறுதித் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு உறுதி கொண்டுள்ளது. இந்தப் பொறிமுறை சிவில் உரிமைகளை நிலைநிறுத்துவதோடு, இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் இடையிலான ஒற்றுமையையும் ஊக்குவிக்கும். எவ்வாறாயினும் நல்லிணக்கத்தை நோக்கிய பாதை தடைகளாலும் சவால்களாலும் நிரம்பிய பாதையாகும். இந்த சவால்களை எதிர்கொள்வதற்காக, நாம் திறந்த மனதுடன் எல்லா வகையான வழிமுறைகளையும் பயன்படுத்தி முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் எமது எதிர்கால சந்ததி சமாதானத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழமுடியும்.

இந்த நாடு இன ரீதியான அடிப்படையில் பிரிக்கப்பட முடியாது; பிரிக்கப்படக் கூடாது. நாம் இலங்கையர் என்ற பொது அடையாளத்துடன், ஒற்றைக் கொடியின் கீழ் ஐக்கியப்பட வேண்டும்.

நாம் சமாதான மற்றும் நல்லிணக்க பாதையில் தொடர்ந்து செயற்படுகின்ற அதேவேளை, நாம் ஒரு அரசு என்ற வகையில் எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதையும் நான் தெளிவாக சுட்டிக்காட்டுகிறேன். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பாதுகாப்பு விவகாரம் குறித்து பொறுப்புச்சாட்டப்பட்டுள்ள நாம் அனைவரும், ஒவ்வொரு பிரஜையையும் பாதுகாப்பதற்கு உறுதி கொண்டுள்ளோம். இந்த அரசு தேசிய பாதுகாப்பை ஆபத்தில் தள்ளியுள்ளதாக குற்றம் சாட்டுகின்ற கூட்டு எதிர்க்கட்சி, எல்.ரீ.ரீ.ஈ மீண்டும் எழுவதாகவும் தேசிய பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தல் என்றும் பேசி வருகிறது. இந்த அரசியல்வாதிகளுக்கு புள்ளிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே, அடிப்படை எதுவும் இல்லாத இந்தக் கருத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு துறையிலுள்ள நாம், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்திருக்கிறோம், செய்கிறோம் என்பதை தெளிவாக பதிந்து கொள்ள விரும்புகிறேன்.

எல்.ரீ.ரீ.ஈ மீண்டும் எழும் என்பது போலியனாது. பாதுகாப்பு படைகள், பொலிஸ் மற்றும் எமது உளவுத் துறையினர் மிகவும் எச்சரிக்கையாகவே உள்ளன. எமது செயற்பாடுகளை என்னால் விளக்கமாகக் கூற முடியாதபோதும், எல்.ரீ.ரீ.ஈ மீண்டும் எழாதவாறு தடுப்பதற்கு அவசியமான அனைத்து முன்னெடுப்புக்களும் எடுக்கப்பட்டுள்ளன என்று கூற விரும்புகிறேன். இந்த நாட்டின் பாதுகாப்பை அச்சுறுத்துகின்ற எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளக்கூடிய வகையில், எமது படையினர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதோடு, அதற்குத் தேவையான தளபாடங்களும் உள்ளன. எமது நாட்டை பாதுகாப்பதற்காக, பாதுகாப்பு அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சோடு மிக நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது.

நம் நாட்டின் சமூக கட்டமைப்பை அச்சுறுத்துகின்ற குழுக்கள் மற்றும் செயற்பாடுகள் மீது, நாம் அவதானத்துடன் இருக்க வேண்டும். பயங்கரவாதம் மட்டுமன்றி, மத கடும்போக்கு மற்றும் இனவெறுப்பு குழுக்கள் மீதும்கூட சகிப்புத்தன்மை காட்டப்படக் கூடாது. நீதியான, சகிப்புத்தன்மை மிக்க சமூகமொன்றைக் கட்டியெழுப்ப இந்த அரசு உறுதி கொண்டுள்ளது. புத்தரின் தசராஜதம்ம என்ற ஆட்சி செலுத்துவதற்கான பத்து விதிகளில் ஆட்சி குறித்த போதனைகளை நாம் கற்கிறோம். ஒரு ஆட்சியாளர் பெருந்தன்மை, அறநெறி, தியாகம், வெளிப்படைத்தன்மை, சுயகட்டுப்பாடு, கோபமின்மை, வன்முறையின்மை, பொறுமை, போட்டியற்றதன்மை ஆகிய பண்புகளைக் கொண்டு ஆட்சி செய்ய வேண்டும் என்று அவ்விதிகளில் கூறப்பட்டுள்ளன. 'தம்மம், மனிதன் மற்றும் சட்டம்' என்ற கே.எம். ஜயதிலகவின் நூலில், பௌத்த அரசியல் தத்துவம் பின்வரும் அடிப்படையில் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். நான் அதனை இங்கு குறிப்பிடுகிறேன்: 'நேர்மை, சமத்துவம், சட்டவாட்சி ஆகியவற்றை நிலைநிறுத்துவதன் மூலமே அதிகாரம் அதனது சட்டபூர்வத்தன்மையை இயக்குகிறது'. ஒரு அரசு என்ற வகையில், நாம் பின்பற்றுவதற்கு முயற்சிக்க வேண்டிய கொள்கைகள் இவைதான். புனித அல்குர்ஆனில் நம்பிக்கை கொள்ளாதோருக்கு (முஸ்லிம் அல்லாதோருக்கு), 'உங்களுக்கு உங்கள் மார்க்கம். எனக்கு எனது மார்க்கம்' என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களுக்கு சகிப்புத்தன்மை போதிக்கப்பட்டுள்ளது. சுய கட்டுப்பாடு மூலம் ஏற்படும் நல்லிணக்கம்தான் சகாழ்வுக்கான சிறந்த வழி என்று இஸ்லாமும் கருதுகிறது.

இலங்கையில் பௌத்த சமூகமும், முஸ்லிம் சமூகமும் ஆயிரம் வருடங்களாக சமாதானமாகவும், நல்லிணக்கத்தோடும் வாழ்ந்து வந்துள்ளன. டி.பி. ஜாயா, எம்.சி. சித்தி லெப்பை போன்ற முஸ்லிம் தலைவர்கள், காலணிய ஆட்சியலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக, டி.எஸ். சேனாநாயக, எப்.ஆர். சேனாநாயக, ஸர் ஜேம்ஸ் பீரிஸ், ஸர் பொன்னம்பலம் இராமநாதன், ஸர் பொன்னம்பலம் அருணாசலம் போன்ற தலைவர்களுடன் இணைந்து,இணைந்து செயற்பட்டனர். எமது சமூகங்களுக்கு இடையில் விரோதத்தை ஏற்படுத்துவதற்கு, எந்தவொரு மத கடும்போக்கு அமைப்புக்கும் நாம் இடமளிக்கக் கூடாது. நாம் சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கின்ற அதேவேளை, வெறுப்பை கக்குகின்ற குழுக்களுக்கு மகிழ்வளிக்கவும் கூடாது. நகைச்சுவையாகும். அரசியல் விமர்சகருமான பில் மாஹெர், 'சகிப்பின்மையை சகித்துக் கொள்ளுமளவுக்கு சகிப்புத்தன்மை கொண்டோராக ஆகி விடாதீர்கள்' என்று ஒரு தடவை கூறியுள்ளார்.

கடந்த சில வருடங்களாக, குறிப்பாக யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், இவ்வாறான குழுக்கள் உருவாகியிருப்பதை நாம் அவதானிக்கிறோம். இவ்வாறான குழுக்கள் சமூகங்களுக்கிடையில் எவ்வாறெல்லாம் பதற்றத்தை உருவாக்குகின்றன என்பதற்கு அளுத்கமையில் ஏற்பட்ட வன்முறைகள், முக்கியமான உதாரணமாகும். இவ்வாறான சம்பவங்கள் இந்த நாட்டில் எந்தவகையிலும் நடைபெறக்கூடாது. இந்தக் குழுக்களை சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். எந்தவொரு சமூகமும், ஒரு சமூகத்தை அடிபணிய செய்வதற்காக அச்சுறுத்த முடியாது. வெறுப்பு வெறுப்பைத்தான் உருவாக்கும்.

பெரும்பான்மையான பௌத்தர்கள் இவ்வாறான குழுக்களை அங்கீகரிப்பது கிடையாது. எவ்வாறாயினும் சில வெளிநாட்டு ஊடகங்களாலும், சமூக ஊடகங்களாலும் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கையீனம் மற்றும் சந்தேகம் காரணமாக, சிலர் இவ்வாறான குழுக்கள் மீது சகிப்போடு நடந்து கொள்கின்றனர். அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மதத்தலைவர்கள் நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஊக்குவிப்பதற்கு முக்கியமான பங்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என நான் நம்புகிறேன். ஊடகங்களும் இவ்வாறான குழுக்களை உணர்வுபூர்வமாக்காது, அவற்றின் வெறுப்பு பேச்சுக்களையும் செயற்பாடுகளையும் கண்டித்து, மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தோற்றப்பாடு இலங்கை முஸ்லிம் சமூகம் மீது எவ்வாறான தாக்கத்தை செலுத்துகிறது என்பது குறித்தும் நான் நன்கு விழிப்புணர்வடைந்துள்ளேன். எந்தவொரு வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நபரேனும், கடும்போக்கு பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆள் சேர்க்கவோ, பயிற்சி வழங்கவோ இந்த நாட்டை பயன்படுத்துவதற்கு முயற்சிப்பதாயின் அது குறித்து பாதுகாப்பு தரப்புக்களும், பொலிஸும் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றன என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நான் உங்களது அக்கறை குறித்து அறிகிறேன். இந்த அக்கறைகள் குறித்து உரையாடுவதற்காக நாம் உங்களோடு இணைந்து செயற்படவும் விரும்புகிறோம். எமது இராணுவப் படைகளும் பொலிஸும் உளவுத்துறையும், எந்தவொரு கடும்போக்கு குழுவுக்கும், எமது நாட்டினதோ, எமது பிராந்தியத்தினதோ ஸ்திரத்தன்மையை குழைப்பதற்கு இடமளிக்காது என்பதை உறுதிப்படுத்துகிறேன். இந்த விவகாரத்தை பாதுகாப்பு தரப்புக்கள் மிகவும் சீரியஸாக எடுத்துக் கொண்டுள்ளன.

எனது உரையை முடிக்குமுன், எனக்கு இந்த அழைப்பை மேற்கொண்டமைக்காக, என்.எம். அமீன் மற்றும் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி ஆகியோருக்கு மீண்டுமொரு தடவை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொறுமைகாத்தமைக்காக சபையோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு தலைமையேற்றுள்ள என்.எம். அமீன் அவர்களின் கூற்றொன்றைக் கூறி எனது உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்:

''இலங்கையை எனது சொந்த நாடாகவும், தாய் நாடாகவும் நான் கருதுகிறேன். நான் இங்குதான் பிறந்தேன். நல்லிணக்கம் ஊடாக சமாதான வாழ்வொன்றுக்கான பங்களிப்பை மேற்கொள்ளுமாறு எனது சக ஆண், பெண்களை ஊக்குவித்தவனாகவும், பங்களித்தவனாகவும் ஒரு உண்மையான இலங்கையனாக மரணிக்கவே நான் விரும்புகிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரே குடும்பமாக வாழ்வோம்!








# நெருப்புக்குள்ளே நின்று போராடும் சமூகமாக முஸ்லிம் சமூகம்

## நூருல்ஹக்கின் நூல் வெளியீட்டில் அமைச்சர் றிசாத்

சுஐப் எம்.காசிம்

பெரும்பான்மை இனவாத சக்திகளைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கிலே கடந்த ஆட்சியில் ஒன்றுபட்ட தமிழர்களும், முஸ்லிம்களும் தற்போதைய நல்லாட்சியிலும் ஆரோக்கியமான சிந்தனைகளை வளர்த்து, தொடர்ந்தும் நல்லுறவு பேணவேண்டியது காலத்தின் தேவையாகும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பன்னூலாசிரியர் எம்.எம்.எம்.நூருல் ஹக் எழுதிய முஸ்லிம் அரசியலின் இயலாமை என்ற நூல் வெளியீட்டு விழா, கொழும்பு வை.எம்.எம்.ஏ அரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர், நூலை வெளியிட்டு வைத்ததுடன், நிகழ்விலும் உரையாற்றினார்.

முஸ்லிம் மீடியா போரத் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்,முன்னாள் பிரதிஅமைச்சர் பிரபா கணேஷன், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி ஜெமீல் ஆகியோரும் உரையாற்றினர். தொடக்க உரையை அஷ்ரப் சிஹாப்தீன் நிகழ்த்த, நூல் ஆய்வை எழுத்தாளர் பீர் முஹம்மத் மேற்கொண்டார். தொழிலதிபர் முஸ்லிம் ஹாஜியார் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், புரவலர் ஹாஷிம் உமர் முதல் பிரதியைப் பெற்றார். பிரதி அமைச்சர் அமீர் அலியும் சிறப்பு அதிதியாகப் பங்கேற்றிருந்தார்.

அமைச்சர் இங்கு உரையாற்றியதாவது,

மனித வாழ்வென்பது குறுகியது. வாழும் காலத்திலே நம்மால் முடிந்ததைச் செய்யும் மனப்பாங்கு வேண்டும். உலகத் தலைவர்களிலே, உன்னதமான தலைவராக முதற்தர பெருந்தலைவராக பெருமானார் (ஸல்) அவர்களை அமெரிக்க சிந்தனையாளர் ஒருவர் அடையாளங்கண்டுள்ளார். புத்தபெருமான், இயேசுநாதர் ஆகியோரையும் தனது நூலில் உள்ளடக்கிய அவர், இரண்டாம் கலீபா உமர் (ரலி) அவர்களையும் 100 பேர்கொண்ட அந்த வரிசையில் இடம்பெறச் செய்துள்ளார். பெருமானாரையும், உமர் ரலியையும் அவர் உள்வாங்கியமைக்கு, அவர்களது ஆட்சி முறையும், மக்கள்பால் அவர்கள் கொண்ட நேசமும், நேரிய பணிகளுமே காரணமென குறிப்பிடுகிறார்.

பெயரளவில் நாங்கள் முஸ்லிம்களாக இருக்க முடியாது. பெருமானார் காட்டித்தந்த வழிமுறையில் வாழ வேண்டும். மனிதன், புனிதன் அல்லன். பிழை விடக்கூடியவன். எனவேதான் இறுதித் தூதர் பெருமானார் எவ்வேளையிலும் பாவமன்னிப்புக் கேட்பவராக இருந்தார்கள். முஸ்லிம் சமுதாயத்தின் முன்னோடித் தலைவர்களான சேர் ராசிக் பரீத், டீ.பி.ஜாயா போன்றவர்கள் பிறசமூகங்களுடன் ஐக்கியமாக வாழ எமக்குக் கற்றுத் தந்திருக்கின்றனர். தமிழ்,சிங்களச் சகோதரர்களுடன் இன உறவைப் பேணி வாழவே இன்னும் நாம் முயல்கின்றோம். அந்த உறவுக்கு முட்டுக்கட்டையாக ஒருசில அரசியல்வாதிகளும், இனவாதிகளும் இன்னும் இருப்பதுதான் வேதனையாக இருக்கின்றது. ஒருசிலர் தமது அரசியல் இருப்புக்காக இரண்டு சமூகங்களையும் மாறிமாறி பந்தாடி வருகின்றனர். கலந்துரையாடல்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதே மிகச்சிறந்த வழிமுறை. இதய சுத்தியுடன் மனந்திறந்து பேசினால் நல்லுறவு நீடிக்கும்.


எழுத்தாளர் நூறுல் ஹக் எழுதிய முஸ்லிம் அரசியலின் இயலாமை என்ற நூலின் பின்னணியில் நாம் சில யதார்த்த விடயங்களைக் கூர்ந்துநோக்க முடிகின்றது. பாதிக்கப்பட்ட சமுதாயத்தில் வாழும் அவர், தமது உள்ளக்கிடக்கைகளையும், வேதனைகளையும் எழுத்துக்களாக வடித்துள்ளார்.

உதாரணமாக மர்ஹூம் அஷ்ரபின் காலத்தில் அவரது சிந்தனையில் உருவாக்கப்பட்டதே ஒலுவில் துறைமுகம். அம்பாறை மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தூரநோக்கில், அவரது பகிரத முயற்சியினால் அமைக்கப்பட்ட அந்தத் துறைமுகம், இன்று அவரது மறைவின் பின்னர், சீரற்றுக் காணப்படுவதை நாம் அவதானிக்கின்றோம். இங்கே ஏற்பட்டிருக்கும் கடலரிப்பால், ஒலுவில் கிராமமக்கள் படுகின்ற வேதனைகள் ஏராளம். அவர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இன்னும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. அந்தப் பிரதேச விவசாயக் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்று நுரைச்சோலை வீடுகளின் பரிதாப நிலை. அம்பாறை கரும்புச் செய்கையாளர்கள் வாழ வழியின்றி படுகின்ற கஷ்டங்கள். இவைகளை நாம் சர்வ சாதராணமாக எடுத்துவிட முடியாது.

24 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது பூர்வீகப் பிரதேசத்தில் குடியேற முனையும் போது. வில்பத்துவை அழிப்பதாக குற்றஞ்சாட்டுகின்றனர். அவர்களின் பிரதிநிதியான என்னை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இனவாத ஊடகங்கள் திட்டமிட்டு இந்தப் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர்.

இதற்கென்றே பிரத்தியேகமான முகநூல்களும், இணையத்தளங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்திலே முஸ்லிம் சமூகம் நெருப்புக்குள்ளே நின்று போராடும் சமூகமாக இருக்கின்றது என்பதை வேதனையுடன் கூறுகின்றேன்.







# முஸ்லிம் சேவைக்கு பணிப்பாளர் நியமிக்க நடவடிக்கை எடுப்பேன்

## அஹ்மத் முனவ்வரின் நூல் வெளியீட்டில் அமைச்சர் மனோகணேசன்

எம்.எஸ்.எம்.சாஹிர்

இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதற்கான தீர்வைப் பெற்றுத் தருவேன் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல், அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட். அஹ்மத் முனவ்வரின் "இலங்கை வானொலி முஸ்லிம் சேவை" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) முற்பகல் நடை பெற்ற இந்த நிகழ்வில், தொடர்ந்து உரையாற்றிய அவர், மேலும் கூறியதாவது,

இலங்கை வானொலியிலே முஸ்லிம் பிரிவு காப்பாற்றப்பட வேண்டும். தொடர்ந்து வலுவாக்கப்பட வேண்டும். இந்த நல்லாட்சியில் கூட அதற்கான ஒழுங்கான கவனிப்பு இல்லை என்ற விடயங்களை எல்லாம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் எல்லோருடைய கவனத்துக்கும் கொண்டு வரவேண்டும் என்ற ஆதங்கத்தில் எனக்கு முன்னால் உரையாற்றிச் சென்ற நண்பர் என். எம். அமீன் தனது மன ஆதங்கத்தைச் அழுத்தமாக எடுத்துச் சொன்னார். அவரை நான் பாராட்ட விளைகின்றேன். இதுதான் பொருத்தமான இடம். வந்தோம் பேசினோம் போனோம் என்று இல்லாமல் சமூகத்துக்குரிய இனத்துக்குரிய மக்களுக்குரிய பிரச்சினைகளை துன்பங்களை கஷ்டங்களை கண்ணீரை எல்லாம் வரிசையாக எடுத்து விட்டுச் சென்றால்தான் அது பயன்பெறும் என்று நினைக்கின்றேன்.

ஆகவே இன்று குறிப்பாக, முஸ்லிம் பிரிவின் பணிப்பாளர் பதவி இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. பதில் பணிப்பாளர் பதவி தான் இருக்கின்றது. என்று தனது ஆதங்கத்தைச் சொல்லி இருந்தார். இது பற்றி முஜிபுர் ரஹ்மானிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அது என் மனதில் பதிந்து விட்டது. நிச்சயமாக நான் அதற்கு நடவடிக்கை எடுத்து தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன் என்று உறுதி படச் சொல்லுகிறேன்.

ஏனென்றால் எமது நாடு ஒரு காலத்தில் ஒரே இனத்துக்கு ஒரே மதத்திற்கு ஒரே மொழிக்கு மாத்திரம் சொந்தமான நாடாக காட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த தோற்றப்பாட்டை ஜனநாயக ரீதியாக நாங்கள் அழித்து ஒழித்திருக்கின்றோம். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அழித்து ஒழித்திருக்கின்றோம். அது உண்மை. இன்று ஒரே நாடு உண்மை. ஒரே நாடு என்றால் ஒரே மொழி அல்ல, மூன்று மொழிகள் இருக்கின்றன. சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகள் என்று 3 மொழிகள் இருக்கின்றன. ஒரே நாடுதான் ஆனால் ஒரே இனமல்ல சிங்கள, தமிழ், முஸ்லிம் என்று மூன்று பிரதான இனங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, எனது சகவாழ்வு அமைச்சிலே 21 இனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பொதுவாகப் பேசும் போது நாங்கள் பிரதான இனங்களைப் பேசுகின்றோம். எமது பிரதான 3 இனங்கள் போக மேலதிகமாக 18 இனங்கள் எமது நாட்டில் வாழுகின்றார்கள். அதே போல் ஒரே நாடுதான் ஆனால் ஒரே மதம் அல்ல, பௌத்த இந்து இஸ்லாமிய கத்தோலிக்க மதம் என்று பிரதான 4 மதங்கள் இருக்கின்றன. ஆகவே எதிர் காலம் என்பது பலமொழி , பலஇனம், பலமதம் என்று பன்மை சார்ந்ததாகத் தான் இருக்க முடியுமே தவிர ஒரே நாடு என்று சொன்னால் ஒரே மதம், ஒரே இனம் என்ற அந்த ஒரே காலகட்டம் இன்று முடிவுக்கு வந்திருக்கின்றது. அப்படி இருக்கின்ற பொழுது பலஇனங்கள் பலமொழிகள் பலமதங்கள் வாழுகின்ற நாடு என்று சொல்லும் பொழுது எல்லா மொழிகளுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா இனங்களுக்கும் உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். சகிப்புத்தன்மை என்று சொல்லுகின்றோம். அந்நிய மதத்தவர்களை, மொழிகளை, இனங்களைப் பார்த்து அந்நியர் என்று சொல்லாமல் சகோதர மதம் , சகோதர இனம் சகோதர மொழி என்று சொல்லுங்கள் என்று சொல்லி இருக்கின்றேன். ஆகவே சகோதரர்களை அரவணைக்கின்ற பாங்கு இருந்தால்தான் அது உண்மையான பன்மைத் தன்மையை தொடர்ந்து கட்டிக்காக்க முடியும் என்பதை தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் அரச கரும மொழிகள் அமைச்சர் என்ற ரீதியிலே நான் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே அந்த நாட்டிலே சிங்கள மொழி பேசும் இனம் இருக்கின்றது. இந்த இனத்துக்குள்ளே பௌத்த மதத்தவர்கள் இருக்கின்றார்கள், கத்தோலிக்க மதத்தவர்கள் இருக்கின்றார்கள். தமிழ் பேசும் மக்ககளில் தமிழர்கள் இருக்கின்றார்கள் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். முஸ்லிம் மக்கள் தங்களை ஒரு இனமாக நீண்ட காலம் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். அதனை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும். அது உண்மை. ஒரே மொழி பேசுவதற்காக ஒரே இனமாக வாழ முடியாது. என்றும் அவர் தெரிவித்தார்.

தனி இனமாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்ற முஸ்லிம் மக்களை அங்கிகரிக்க வேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. அது உண்மை. அப்படி அங்கீகரிப்பதன் மூலமாகத்தான் உண்மையான அரவணைப்பு ஏற்படும். உண்மையான அந்தஸ்து கிடைக்கும் அதன் மூலமாகத்தான் உண்மையான ஐக்கியம் ஏற்படும். தவிர எல்லா மொழிகளையும் எல்லா இனங்களையும் எல்லா மதங்களையும் ஒன்றாகக் கலக்கி ஒரு கூட்டுக் கலவை கலாசாரத்தை உருவாக்கி விட முடியாது.

அப்படியல்லாமல் எல்லா மொழிகளும் எல்லா மதங்களும் எல்லா இனங்களும் அங்கீகரிக்கும் போது தான் அது அழகாக இருக்கும்.

பல இனங்கள் பல மொழிகள் பல மதங்கள் என்பது ஒரு பலவீனமல்ல, அது எமது சக்தி என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். என்றும் அவர் தெரிவித்தார்.





பலஸ்தீனின் அத்யான் அக்ல் என்ற 18 வயது யுவதி புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கால கணிப்பு தொடர்பாக அபார ஆற்றலைப் பெற்றிருப்பதாலே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.






## வான் பிறை

# குடும்ப கட்டமைப்பில் இஸ்லாமிய பெண்ணின் பங்களிப்பு

குடும்பத்தில் பெண்கள் வகிக்கும் பாத்திரம் மிக முக்கியமானதாகும். பெண் பிள்ளைகளை நல்ல மகளாக, நல்ல மனைவியாக நல்ல தாயாக உருவாக்குவது பெற்றோரின் பொறுப்பாகும். ஒவ்வொரு பெண்ணும் விவாகம், திருமண உறவு, இரத்த உறவு, பலதார மணம், விவாகரத்து, வாரிசுரிமை, குழந்தை வளர்ப்பு, குடும்ப வாழ்வு போன்ற அனைத்து விடயங்களிலும் விழிப்புணர்வு பெறுவது அவசியமாகும்.

உலக வழிகாட்டியான அண்ணல் நபி(ஸல்) அவர்கள் பெண்களது உரிமைகளையும் கடமைகளையும் உறுதிப்படுத்தி சமூக கட்டமைப்புக்கு பெண்களின் பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்கள். பெண்கள் தமது பொறுப்புக்களை ஒழுங்குற நிறைவேற்றுவதன் மூலம் முன்மாதிரியான குடும்பங்கள் உருவாகின்றன.

குடும்பங்களின் பலம் சமூகத்தின் பலம் ஆகும். சமூகங்களின் பலம் நாட்டினி பலமாகும். அல்குர்ஆன் குடும்பத்தை அல்லாஹ்வின் அத்தாட்சி எனக்கூறுகின்றது. '' நீங்கள் அமைதி பெற வேண்டும் என்பதற்காக உங்களிடம் இருந்து உங்கள் சோடியை படைத்துள்ளமை அவனது அத்தாட்சிகளில் ஒன்றாகும். '' (சூறா ரூம்21 என்ற குர்ஆன் வசனம் இதனை தெளிவுபடுத்துகின்றது.

இன்று எமது முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் குடும்ப வாழ்வு பல்வேறு காரணிகளால் படிப்படியாக சிதைவடைந்து செல்கின்றது என்பதற்கு ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள காதி நீதிமன்றங்கள் சான்றாகும்.

பல குடும்பங்களில் சமுகமான குடும்ப வாழ்வு காணப்படுவதில்லை. விவாகரத்துகள் அதிகரித்து செல்கின்றன. பிற சமூக தொடர்புகள் திருமணம் வரை எமது சமூகத்தை இழுத்துசெல்கின்றது.

தனிக்குடித்தனத்தையே விரும்பும் மனைவியர் குடும்ப உறவுகளை பெரும்பாலும் பிரித்துக்கொள்வார்கள். கணவர்மார் தம் தாய் தந்தை சகோதரிகளுடன் உறவாடுவதை கூட விரும்பாத பெண்களும் சமூகத்தில் வாழ்கின்றனர்.

இஸ்லாமிய குடும்பங்கள் என்று சொல்லிக்கொள்கிறோம். ஆனால் இஸ்லாமிய வாடை கூட இல்லாத குடும்பங்கள் பலவாகும். திருமணங்களில் கணவன் மனைவி தெரிவில் பணமும் கல்வி தகைமைகளும் போலி கௌரவங்களும் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பல்வேறு வகையில் சீதனம் பெற்று ஆடம்பர திருமண வைபவங்கள் நமது சமூகத்தில் நாளுக்கு நாள் மலிந்துவிட்டன. பள்ளிவாசலில் நிகாஹ் என்பார்கள். மறுதினம் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கூத்து கும்மாளம் உயர் மட்டத்தில் உள்ள பிரமுகர்களுக்கான வைபவங்கள் என வீண் விரயங்களின் அளவை மட்டிட முடியாதுள்ளது. இந்நிலையில் எமது இஸ்லாமிய குடும்பங்களின் உருவாக்கத்தில் நமது பெண்களின் பங்களிப்பு அவசியமாகும்.

ஸக்கியா ஸித்தீக்

# சகோதரன் மீதான கடமை



நோயுற்றோரை நலம் விசாரிக்கச் செல்ல வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. நோய் விசாரிக்கச் செல்வது ஒரு முஸ்லிமின் மீது கடமையாகும். நோயாளியிடம் சென்று ஆறுதல் கூறும்போது நபி (ஸல்) அவர்களின் கட்டளையை நிறை வேற்றுகிறோம் என்று மன நிறைவும் ஏற்படும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பசித்தவருக்கு உணவளியுங்கள். நோயாளிகளை நலம் விசாரியுங்கள். கைதிகளை விடுவியுங்கள். (ஸஹீஹுல் புகாரி)

பராஃ இப்னு ஆஸிப் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: நோயாளிகளை நலம் விசாரிக்குமாறும், ஜனாஸாவை பின் தொடரவும், தும்மியவருக்கு பதிலளிக்கவும், சத்தியம் செய்தவருக்கு உபகாரம் செய்யவும், அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவி செய்யவும், அழைப்பை ஏற்று பதிலளிக்கவும், ஸலாத்தைப் பரப்புமாறும் நபி (ஸல்) அவர்கள் எங்களை ஏவினார்கள். (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களின் போதனைகள் இஸ்லாமிய சமூகத்தில் வெகு ஆழமாக ஊன்றப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் வாழ்வில் தான் நோய்வாய்ப்பட்டால் தனது சகோதரன் தன்னை நலம் விசாரிக்க வர வேண்டும், அது அவனது கடமை என்று எண்ணுமளவுக்கு இப்பண்பு வலுப்பெற்றுள்ளது.

அதை மறந்துவிட்டால் அல்லது அதில் குறை ஏதும் செய்துவிட்டால் அவன் தனது சகோதரனின் கடமையை மறந்தவன் போன்றாவான். அல்லது சகோதரனின் கடமைகளில் குறை செய்தவனாகிறான்.

நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த ஒழுக்கங்களில் ஒன்றுதான் தங்களது வலது கரத்தால் நோயாளியை தடவிக் கொடுத்து, அவருக்காக துஆச் செய்வதும். நோயாளிகளை நலம் விசாரிப்பதில் முஸ்லிம்கள், தலைமுறை தலைமுறையாக இப்புகழுக்குரிய நபிவழியைப் பின்பற்றி வருகிறார்கள்.

ஒருவருக்கொருவர் கருணையிலும் அன்பிலும் உதவி செய்து கொள்வதிலும் எடுத்துக்காட்டாகத் திகழும் இப்பண்பு முஸ்லிம்களின் தனித் தன்மையான அடையாளமாகவே நிலைபெற்றுத் திகழ்கிறது.

# ஜமாஅத் தொழுகை


ஜமாஅத் (கூட்டுத்) தொழுகையைக் கடைப்பிடியுங்கள். ஸகாத்தையும் கொடுத்து விடுங்கள். ருகூஃ செய்வோருடன் சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்! (2:43)

மேற்காணும் வசனத்திற்கு ஐங்காலத் தொழுகைகளை ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுங்கள் என்பதாக இப்னுஅப்பாஸ்(ரழி) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். (தப்ஸீர் இப்னு அப்பாஸ்)

ஜமாஅத்துடன் தொழுவதற்கும், தனிமையாகத் தொழுவதற்குமிடையே நன்மையில் ஏற்ற தாழ்வு: ஜமாஅத்துடன் தொழுவது தனித்துத் தொழுவதைவிட 27 பங்கு பதவியால் கூடுதலாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு உமர்(ரழி), புஹாரி, முஸ்லிம்)

என்னைத் தொழக்கண்டவாறே நீங்களும் தொழுங்கள் மாலிக் பின் ஹுவைரிஸ் (ரழி). (புஹாரி, முஸ்லிம்)

## ரோஸ் லட்டு



### தேவையான பொருட்கள்:

- மில்க் மைட் - 1/2 கப்.
- ரோஸ் சிரப் - 4 தேக்கரண்டி
- காய வைத்துப்பதப்படுத்திய தேங்காய்
- பேக்கிங் சோடா - 1/2 தேக்கரண்டி
- பொடி - 1 1/4 கப்.
- ஏலக்காய்த்தூள் - 1/2 தேக்கரண்டி
- நெய் - 1 டீஸ்பூன்,
- உப்பு - 1 சிறிதளவு
- அலங்கரிக்க பாதாம் அல்லது முந்திரி - 10
- அலங்கரிக்க தனியாக தேங்காய் பொடி - 1/4 கப்.

### செய்முறை

பெரிய அகலமான பாத்திரத்தில் நெய்விட்டு தேங்காய் பொடியை போட்டு மிதமான சூட்டில் வறுக்கவும். இதனோடு, மில்க் மைட்டையும் விட்டு கிளறவும். இது சுருண்டு வரும்போது ஏலக்காய்த் தூள், உப்பு சிறிதளவையும் சேர்க்கவும். பின்னர் பாத்திரத்தை இறக்கி சிறிது நேரம் ஆறவிட்டு ரோஸ் சிரப்பை சேர்த்துக் கிளறி, சிறிது சூடாக்கியிருக்கும்போது உருண்டைகளாக லட்டு பிடித்து தேங்காய்த்தூளின் மேல் உருட்டி அதன் மேல் ஒரு முந்திரி அல்லது பாதாம் வைத்து அலங்கரித்து பரிமாறலாம்.

இயற்கையாக சத்தாக வேண்டுமென்றால் கரட்டையும் துருவி விருப்பமான நிறம் சேர்த்து செய்யலாம்.




# அவசரமாக உணவை ஊட்டாதீர்கள்

பொதுவாக குழந்தைகள் அழுது கொண்டிருக்கும் போதோ, கோபத்தில் இருக்கும் போதோ அவர்களுக்கு உணவு கொடுப்பதை தவிர்க்க வேண்டும்.

குழந்தை சாப்பிடவில்லையென்றால் குழந்தையை மிரட்டவோ, அடிக்கவோ, பயம் காட்டவோ கூடாது. இவ்வாறு செய்வதனால் மன நெருக்கடியும், டென்சனையும் அனுபவிக்க நேரிடும். இதனால் குழந்தைகள் உணவை அறவே வெறுப்பார்கள்.

அதுபோல் குழந்தைகளுக்கு அவசர அவசரமாக உணவு ஊட்டக்கூடாது. தாயின் அவசரத்திற்கு தகுந்தபடி குழந்தையால் மின்னல் வேகத்தில் சாப்பிட முடியாது. சிறிதளவு உணவு கொடுத்தாலும், பொறுமையாகவும், நிதானமாகவும் ஊட்ட வேண்டும்.

ஆரம்பத்தில் உணவுகளை துப்பினால் கொஞ்சம் கொஞ்சமாக பழக்கப்படுத்த வேண்டும். இயந்திரம் போல் குழந்தையை நினைக்காமல் நிதானமாக உணவை ஊட்ட வேண்டும்.

வேகவைத்து மசித்த காய்கறிகள், வேகவைத்த கரட், வேகவைத்த அப்பிள் போன்றவற்றை கொடுக்கலாம்.

இரவில் காய்ச்சிய பால் கொடுக்க வேண்டும்.

பழத்துண்டுகள் தோல் நீக்கி கொடுக்க வேண்டும். பப்பாளி, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை போன்றவற்றையும் கொடுக்கலாம்.

சப்பாத்தி, ரொட்டி, பாண் போன்றவற்றை குறைந்த அளவு கொடுக்கலாம்.

குழந்தைக்கு பல் முளைத்து மென்று சாப்பிடும் அளவு வந்தவுடன் வேக



வைத்த பருப்புகள், தானிய வகைகள், கிழங்கள் போன்றவற்றையும் கொடுப்பது நல்லது.

வாசகர்களாகிய நீங்களும் உங்களது சமையல் மற்றும் உடல் சார்ந்த அடிப்படை பிரச்சினைகள் குறித்த சந்தேகங் களை எமக்கு எழுதி அனுப்புவதோடு உங்களுடைய ஆக்கங்களையும் எமக்கு அனுப்பிவைக்கலாம். உங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம். அனுப்ப வேண்டிய முகவரி,

நவமணி அன்புடன் கண்மணி
# 156, ஹொஸ்பிடல் ரோட்,
களுபோவில, தெஹிவளை.

## அன்புடன் கண்மணி

பா.மலரம்பிகை

# கைப்பேசி பாவனையில் பெண்கள் கவனம்

கைப்பேசியில் முடிந்த அளவு குறைவான நேரத்தில் பேசுங்கள். அதிகம் பேச வேண்டும் என்றால், ஹெட்போன், இயர்போன் பயன்படுத்துங்கள்.

சார்ஜ் ஆகிக் கொண்டிருக்கும்போதே, அழைப்பு வந்தால் அப்படியே எடுத்து பேசக்கூடாது. மொபைலில் சார்ஜ் மிகக்குறைவாக இருக்கும்போது பேசுவது கூடாது. ஏனென்றால் அப்போதுதான் ரேடியேசன் அதிகம் இருக்கும். கதிர்வீச்சு பாதிப்பு மிகுதியாக இருக்கும்

ஸ்பீக்கரை ஒன் செய்து வைத்து விட்டு, மொபைலை காதுக்கு அருகில் வைத்துப் பேசுவது செவிப்பறையில் சேதத்தை ஏற்படுத்தி விடும்.

ஜீன்ஸ் பக்கெட்டில் கைப்பேசி வைப்பதை தவிர்த்து, அதனை ஹேண்ட் பேக்கில் அல்லது பர்ஸில் வைத்துக் கொள்வது நல்லது.

நீங்கள் உபயோகிக்கும் கைப்பேசி, பேசும்போது அதிகமாக சூடாகிக் கொண்டே போனால், அதனை பாவிக்காமல் இருப்பது நல்லது.

குழந்தைகளிடம், கைப்பேசியை கொடுத்து பேசி கொஞ்ச வைப்பதை கொஞ்சம் தவிர்க்கலாம்.

எந்த நேரமும் கைப்பேசியில் பேசிக் கொண்டே இருப்பதும், நரம்பு மண்டலத்தை தாக்கும். தலைவலி அடிக்கடி வந்தால் கவனமாய் இருக்கவும்.

கைபேசி எண்களை அறிமுகமில்லாதவர்களிடம் கொடுக்க கூடாது.

பொதுவாக பெயருடன் வரும் அழைப்புகளை மட்டுமே பேசுதல் பெண்களுக்கு நல்லது. அறிமுகம் இல்லாத அழைப்புகளையோ, மிஸ்டு கோல்களுக்கு திரும்பக் கூப்பிடுவதோ கூடாது.

வாகனங்களை செலுத்திக்கொண்டு செல்லும் போது கைபேசி பாவனையை தவிர்ப்பது நல்லது. இதனால் உங்களுக்கும் ஆபத்து, பாதையில் செல்பவர்களுக்கும் ஆபத்து.

இரவு நேரத்தில் சார்ஜர் போட்டுவிட்டு காலையில் எடுப்பது போன்ற பழக்கத்தை கைவிடுங்கள். அதனால் கைப்பேசி பேட்டரிக்கும் ஆபத்து, நமக்கும் ஆபத்து.



# குழந்தையின் ஆரோக்கியத்திற்கு தாய்ப்பால்

பிறந்த குழந்தைக்கு தாய் பால் கொடுப்பது மிகவும் சிறந்தது.

குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்தில் தாய் கொடுக்கும் முதல் பாலில் மிக நிறைந்த சத்துக்கள் உள்ளன. முதல் ஆறு மாதம் தாய்ப்பால் மட்டுமே பெறும் குழந்தைகள் வாழ்வின் சிறந்த ஆரம்பத்தினைப் பெறுகின்றார்கள்.

இவர்களுக்கு உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி சீராக இருக்கின்றது.

மூச்சுப் பாதை நோய்கள், வயிற்றுப் போக்கு நோய்கள் போன்ற பல ஆபத்தான நோய்களில் இருந்து பாதுகாப்பு கிடைக்கின்றது.

தாய்பால் கொடுக்க முதலில் பொறுமை அவசியம். இது கவலையோடும், கண்ணிரோடும் இருக்கக் கூடாது.

குழந்தை பிறந்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் குழந்தைக்கு தாய்பால் கிடைக்க வேண்டும்.

அதில் நோய் எதிர்ப்பு சக்தி கொள்ளை கொள்ளையாய் அடங்கி உள்ளது. முறையாக குழந்தை கையில் பிடித்து பால் குடிக்க பழக்க வேண்



டும்.

பொதுவில் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை பால் கொடுக்க வேண்டும் என்றாலும் குழந்தை தேவையென அழும் பொழுது பால் கொடுப்பது சிறந்தது.

தாய்க்கு அதிக பால் சுரக்கும் பொழுது மார்பகங்கள் கனத்தும் வலியுடனும் இருக்கலாம். இதனைத் தவிர்க்க குழந்தைக்கு அடிக்கடி பால் கொடுக்கும் பொழுது இப்பிரச்சினை குறையும். அதற்குள் மருத்துவ உதவியும் பெற்று விடுங்கள்.

பால் கொடுக்கும் முன் அதாவது சில நிமிடங்களுக்கு முன் மார்பகங்களுக்கு வெது வெதுப்பாக ஒத்தடம் கொடுப்பதும் நல்லது.





# அலப்போவின் வெற்றி

# சிரியாவில் திருப்புமுனை

சிரியாவின் கேந்திரவியல் முக்கியத்துவம் வாய்ந்த அலப்போ நகர் புரட்சிப்படையினரால் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. சிரியாவில் முக்கிய போராளிக்குழுக்களின் கூட்டமைப்பான ஜெய்சுல்பத்ஹ் என்ற அமைப்பே, அலப்போ நகரை வெற்றி கொண்டுள்ளது.

சிரியாவின் போராளிக் குழுக்களில் இஸ்லாமிய வாதப் போக்கைக் கொண்ட இயக்கங்களே இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. அல்- கொய்தாவின் செல்வாக்கில் இருந்த ஜப்துன் நுஸ்ரா என்ற இயக்கம் இந்த கூட்டமைப்பிலிருந்து கருத்து முரண்பாடுகள் காரணமாக மிக சமீபத்தில்தான் வெளியேறியிருந்தது.

எனவே இஸ்லாமியவாதிகளாக இருந்த போதும் அல்-கொய்தா போன்ற சர்வதேச தீரிவாத இயக்கங்களின் செல்வாக்கிலுள்ள ஒரு கிளை அமைப்பான ஜப்ஹுதுன் நுஸ்ரா இக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறியமை இக்கூட்டமைப்பிற்கு ஓரளவு சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

அலப்போ நகர் வெற்றி கொள்ளப் பட்டுள்ளதை பல தரப்பினரும் உறுதிப்படுத்தியுள்ளனர். ஐக்கிய இராச்சியத்தில் இருந்து செயற்படும் மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் அலப்போ வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளது. அத்தோடு, துருக்கியில் இருந்து செயற்படும் சிரிய தேசியக் கவுன்சிலும் இந்த வெற்றியை உறுதிப் படுத்தியுள்ளது.

இருப்பினும் சர்வதிகாரி பஷர் அல் -அஸாத்தின் ஆதரவுக்கு வந்துள்ள லெபனன் ஷியா இராணுவ மிலீஷியாக்களான ஹிஸ்புல்லா அமைப்பு அலப்போ நகர் வெற்றி கொள்ளப்படவில்லை என தமது கட்டுப்பாட்டிலுள்ள அல்-மனார் என்ற தொலைக் காட்சியின் இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் பல்வேறு நடுநிலையான, நம்பகமான தரப்புக்களின் செய்திகளின் படி அலப்போ நகரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்ட காலம் பஷர் அல்-அஸாத்தின் அரச படையினரின் முற்றுகையிலிருந்த வரலாற்று சிறப்பு மிக்க அலப்போ நகர் வெற்றி கொள்ளப்பட்டமை சிரிய போராட்டத்தை இன்னுமொரு கட்டத்திற்கு நகர்த்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2010ஆம் அண்டின் இறுதியில் தூனிசியாவில் வெடித்த ஜெஸ்மின் புரட்சி அல்லது அரபு வசந்தம் என்ற மக்கள் போராட்டம் வடஆபிரிக்க மற்றும் வளைகுடா அரபு நாடுகளில் எதிராக மக்கள் போராட்டங்களை பரவலடையச் செய்தது.

இந்த மக்கள் போராட்டங்கள் வெடித்த நாடுகளில் அவை வெவ்வேறு வடிவங்கள் பெற்றன. தூனிசியாவிலும், மொரோக்கோவிலும் மிகவும் சாத்வீகமான முறையில் - சில வன்முறைகள் நிகழ்ந்த போதும் - இப்போராட்டங்கள் வெற்றி பெற்றன.

தூனிசியாவில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஸெய்னுலாப்தீன் பின் அலி பதவி துறந்து தமது குடும்பம் சகிதம் நாட்டை விட்டு வெளியேறினார்.

பின்னர் உருவாக்கப்பட்ட இடைக் கால அரசாங்கம் சிறிது காலத்தின் பின்னர் தூனிசியா வரலாற்றில் முதலாவது ஜனநாயக பூர்வமான பாராளுமன்றத்தேர்தலை நடாத்தியது. இந்தத் தேர்தலில் இஸ்லாமிய வாத அந்நஹ்ழா என்ற கட்சி வெற்றி பெற்றதோடு, ஏனைய எதிர்க் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஒரு தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டது.

இந்த தேசிய அரசாங்கத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் அதிக வாக்குகளைப் பெற்ற அந்நஹ்ழா கட்சி ஒரு இஸ்லாமியவாதக் கட்சியாக இருந்த போதும், மதச்சார்பற்ற, கம்யூனிஸ இடதுசாரிக் கட்சிகளையும் தம்மோடு இணைத்துச் செயற்படும் பக்குவத்தை அந்நஹ்ழா கட்சி பெற்றிருந்தது.

மொரோக்கோவை எடுத்துக் கொண்டால் அதன் அனுபவமும் மிகவும் சாத்வீகமானதே.

வடஆபிரிக்க நாடுகளில் மன்னர் ஆட்சி நிலவும் நாடுகளில் மொரோக்கோவும் ஒன்று.மன்னர் ஆட்சி நிலவுகின்ற போதிலும், மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றமும் அங்குள்ளது. அரபு வசந்த புரட்சியால் கவரப்பட்ட மொரோக்கோ மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களாலும், அழுத்தங்களாலும் நீதியான தேர்தலை வைக்கும் நிர்ப்பந்தம் மொரோக்கோ மன்னருக்கு ஏற்பட்டது.

இத்தேர்தலில் போட்டியிட்ட மொரோக்கோவின் இஸ்லாமியவாதக் கட்சியான நீதிக்கும், அபிவிருத்திக்குமான கட்சி தேர்தலில் வெற்றி பெற்றது. அதன் தலைவர் பின்கீரான் மொரோக்கோவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த இரு நாடுகளினதும் இஸ்லாமியவாதிகளது அரசியல் அனுபவம் மிகவும் சாத்வீகமானது. மக்கள் போராட்டம் வன்முறை வடிவம் எடுக்கமுன்னர் ஆட்சியாளர்கள் மக்களின் கோஷங்களுக்கும், கோரிக்கைகளுக்கும் செவி மடுத்ததனால் பெருமளவு இரத்தம் சிந்தாமல் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

அத்தோடு, தூனிசியா அனுபவத்தின் வெற்றிக்கு இன்னுமொரு காரணமும் உள்ளது. அந்நஹ்ழா கட்சியின் தலைவர் ராஷித் அல்-கன்னூஷியின் சிந்தனைகள் தான் அதற்கான காரணம்.

ஏனெனில் இஸ்லாமிய அரசியல் சிந்தனை ஜனநாயகத்துடன் எவ்வாறு பொருந்திச் செல்கின்றது என்பது பற்றிய ஆழமான வாசிப்பை கொண்டவர் அவர். எனவே ஏனைய இஸ்லாமிய இயக்கங்கள் கொண்டு மிகவும் ரெடிக்கல் போக்குக் கொண்ட இயக்கமாக அல்லாது, மிகவும் பரந்த பார்வையும், ஆழமான சிந்தனையும் கொண்ட இயக்கமாக அந்நஹ்ழாவை அவர் வடிவமைத்திருந்தார்.

தூனிசியாவினதும், மொரோக்கோவினதும் அனுபவம் இவ்வாறிருக்க ஏனைய வட ஆபிரிக்க நாடுகளான லிபியா, எகிப்து ஆகிய நாடுகளையும் சிரியா, யெமன் போன்ற வளைகுடா, ஷாம் தேசத்து அரபு நாடுகளதும் நிலை மிகவும் வித்தியாசமானதாகும்.

ஏனெனில் நாம் ஏலவே விளக்கியதைப் போன்று மொரோக்கோவினதும், தூனிசியாவினதும் சாத்வீக வழிமுறை இந்த நாடுகளில் வெற்றி பெறவில்லை. குறிப்பாக சிரியாவின் நிலை மிகவும் மோசமானது.

சிரியாவின் தற்போதைய ஜனாதிபதி பஷர் அல்-அஸாத் ஒரு சர்வாதிகாரிக்கு சமாந்தரமானவர். 2011 ஆரம்ப கூறுகளில் பஷர் அல்-அஸாத்தின் ஆட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம் வெடித்த போது ஆயுதங்களைக் கொண்டு மக்களை அடக்கும் வழிமுறையையே அவர் பின்பற்றினார். மக்களின் ஆர்ப்பாட்டங்களின் போது துப்பாக்கிச் சூடு நிகழ்த்தவும், செயற்பாட்டாளர்களை கொன்றொழிப்பதுமே பஷர் அல் -அஸாத்தின் வழிமுறையாக இருந்தது.

பஷர் அல்- அஸாத்தின் அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள முடியாத, மக்களின் சாத்வீகப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இந்த வகையில் பல்வேறு சிந்தனைப் போக்குகளை கொண்ட பல்வேறு அரச எதிர்ப்பு போராட்டக் குழுக்கள் உருவாகின. முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம், மதச்சார்பற்ற தரப்பினர் மற்றும் ஏனைய இஸ்லாமியவாதிகள் என்று பலரும் பல போராட்ட இயக்கங்களை உருவாக்கினர்.

இந்தப் போராட்ட இயக்கங்கள் பல்வேறு சிந்தனை பின்னணிகளை கொண்டிருந்த போதும், பஷர் அல்-அஸாத்தின் அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவே போராடுகின்றனர் என்பதனால் இப்போராட்ட இயக்கங்களுக்கு மத்தியில் ஒரு புரிந்துணர்வு காணப்பட்டுவந்தது.

இந்தப் பின்னணியில்தான் கடந்த வருடம் பல்வேறு இயக்கங்களையும் இணைக்கும் வகையில் ஜெய்சுல் பத்ஹ் என்ற போராட்ட கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பு பஷர் அல்-அஸாத்தின் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக மிகக் கடுமையாக செயற்பட்டு வருகின்றது.

சவூதி அரேபியா, துருக்கி, கட்டார் ஆகிய நாடுகள் இந்த அமைப்புக்கு ஆதரவளித்து வருவதாக சந்தேகிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் பஷர் அல்-அஸாத்தின் அரச பயங்கரவாதத்துக்கு மத்திய கிழக்கின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள ஈரானும், ரஷ்யாவும் இராணுவ ரீதியாக ஆதரவளிக்கின்ற நிலையில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துவரும் ஜெய்சுல்பத்ஹ் போராட்ட அமைப்புக்கு சவூதியும், துருக்கியும், கட்டாரும் ஆதரவளிக்கின்றமையை குற்றமாக அடையாளப்படுத்த முடியாது.

சிரியாவின் இந்த சிவில் யுத்தம்



இவ்வாறு தொடர்கையில் 2013 ஆம் ஆண்டு உருவெடுத்த மிகவும் வன்முறைத்தனமான, கொலைகார, மனிதாபிமானமற்ற தீவிரவாதிகளான ஐ.எஸ்.ஐ.எஸ்., சிரிய மக்கள் போராட்டத்தை திசை திருப்பும் வகையில் செயற்படத் தொடங்கியது.

இஸ்லாமிய கிலாபத் என்ற போலியான வாதத்தை முன்வைத்து அராஜகம் செய்து வரும் இவர்கள், இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை சிதைத்து வருவதோடு, சிரியாவினதும், ஈராக்கினதும் எதிர்காலத்தை பல தசாப்தங்களால் பின்நோக்கியே இழுத்துச் செல்கின்றது. இந்நிலையில் பஷர் அல்-அஸாத்தின் அரச பயங்கரவாதத்தை எதிர்ப்பதோடு, ஐ.எஸ். தீவிரவாதிகளையும் ஒழித்துக் கட்ட வேண்டிய பொறுப்பு சிரிய போராளிக் குழுக்களுக்கு உள்ளது.

***

# முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கூட்டமைப்பு உருவாக வேண்டும்

## கிழக்கின் எழுச்சி அமைப்பு வேண்டுகோள்

(ஏ.எல்.எம்.சலீம்)

முஸ்லிம் அரசியல் தலைமைகளை ஒன்றிணைத்து முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த முயற்சியை கிழக்கின் எழுச்சி அமைப்பு சளைக்காமல் முன்னெடுக்கும் என, கிழக்கின் எழுச்சி அமைப்பின் செயலாளர் நாயகம் சேகு இஸ்ஸதீன் அஸ்ஸுஹூர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு அழைப்பு விடுத்து அவர் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளார்.

பிரிந்து கிடக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் இன்றைய முக்கியமான காலகட்டத்தில் மக்கள் நன்மைக்காக ஒற்றுமைப்பட வேண்டுமென்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

செயலாளர் நாயகம் சேகு இஸ்ஸதீன் அஸ்ஸுஹூர் தமது ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள் என்று சொல்லித் தரப்பட்டிருந்தும், அதன் பலத்தை தெரிந்திருந்தும், அதைச் செய்ய நினைக்காத ஒரு நிலையில் இன்றைய முஸ்லிம் தலைமைகள் இருந்து வருவதை அனைவரும் அறிவோம். சில காலமாக முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு (Muslim National Al-liance) என்பது பற்றி பேசப்பட்டிருந்தாலும். அதற்கு சில தலைவர்கள் அறைகூவல் விடுத்திருந்த போதிலும், அதை நடைமுறைச் சாத்தியமாக்க முடியாத நிலையே காணப்பட்டது.

முஸ்லிம் தலைமைகள் ''பொதுநலம்'' என்ற அடிப்படையில் விட்டுக் கொடுப்புக்களுடன் செய்ய முன்வரவேண்டிய விடயம் இது. எது எவ்வாறினும் பிரிந்து கிடக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளை மக்களின் நன்மைக்காக ஒன்றுப்படுத்துவதற்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன.

முதலாவது, அனைத்து முஸ்லிம் தலைவர்களுக்கும் தாய்க்கட்சியான முஸ்லிம் காங்கிரஸில் ஏழு பேர் கொண்ட ஒரு தலைமைத்துவ சபையை ஏற்படுத்தி, அதில் அம்பாறைக்கு இரண்டு உறுப்பினர்களும், மட்டக்களப்பிற்கு இரு உறுப்பினர்களும், திருகோணமலைக்கு ஒரு உறுப்பினரும், வடக்குக்கு ஒரு உறுப்பினரும், வடகிழக்கிற்கு வெளியில் ஒரு உறுப்பினருமாக, மொத்தமாக ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டும். இவர்களிடமிருந்து இத்தலைமைத்துவ சபைக்குப் பொறுப்புக் கூறக்கூடிய ஒரு தலைவரை சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இது தனி மனிதனிடம் அதிகாரங்கள் குவிவதையும், தனி மனிதன் சர்வாதிகாரப் போக்கில் நடப்பதையும், முஸ்லிம்கள் மத்தியில் பிரதேசவாதம் விதைக்கப்படுவதையும் தடுக்கக்கூடிய ஒரு சிறப்பான முன்மொழிவாகும். மேலும் இதன் மூலம் மசூரா அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதும் உறுதி செய்யப்படும்.

இதுதான் இறுதி ஏற்பாடு என்பதல்ல. இது ஒரு முன்மொழிவு மட்டுமே. இதை கல்விமான்களும், அரசியல்வாதிகளும், உலமாக்களும், ஏனைய ஆர்வமுள்ள எவரும் இன்னும் செம்மைப்படுத்தி, மக்களுக்குப் பயனுள்ள முறையில் கொண்டு வர முன்வரவேண்டும்.

இந்த முறையின் மூலம் தலைவர்கள் தனியாகப் போய் பேரம் பேச முடியாது என்பதனால், இதற்கு இணங்க மாட்டார்கள். ஆனால் தலைவர்களின் தனிப்பட்ட நலனா அல்லது ஒட்டுமொத்த முஸ்லிம்களின் நிரந்தர நலனா எனும் விடயத்தில் சுயநலங்களுக்கப்பால் சிந்தித்து முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

இரண்டாவது, முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு (MNA) எனும் அமைப்பின் கீழ் அனைத்து முஸ்லிம் தலைவர்களையும், கல்விமான்களையும், உலமாக்களையும், பல்துறைசார் ஆளுமைகளையும் ஒன்றுபடுத்தி, முஸ்லிம்களின் அபிவிருத்தி, உரிமை மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒரு பேரவையாக மாறி சிந்தித்து, ஒற்றுமையாக குரல் கொடுக்க வைப்பதாகும்.

இதற்கு முன் பலரால் இது போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும், அவை அனைத்தும் குறுகிய அரசியல் சிந்தனைகளால் மறுதலிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு முயற்சி செய்த சக்திகளை கிழக்கின் எழுச்சியுடன் கைகோர்த்து மீண்டும் அம்முயற்சிக்கு வலு சேர்க்க ஒன்றிணையுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இக்கூட்டமைப்புக்கு சுயநல காரணங்களால் மறுப்புத் தெரிவித்து, ஒற்றுமைப்பட மறுக்கும் சுயநலத் தலைவர்களை மக்கள் தோலுரித்துக் காட்டி, முஸ்லிம் ஒற்றுமையின் துரோகிகள் என்று முத்திரை குத்தவும் கிழக்கின் எழுச்சி தயங்காது- என்றார்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்வது காலத்தின் கட்டாயம்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்




எந்தவித குற்றச்சாட்டுகளும் இன்றி பல வருட காலமாக சிறைச்சாலைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளை நிபந்தனையின் அடிப்படையிலாவது விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்துள்ளார். -

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். இலங்கை அரசு சர்வதேச ரீதியில் பல சவால்களை முகம் கொடுத்து வருகின்ற நிலையில், இப்பிரச்சினை மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தும்.

எந்தவித குற்றச்சாட்டுகளுமின்றி சிறைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் பல தடவைகள் பாராளுமன்றத்தில் வலியுறுத்தி உரையாற்றியுள்ளேன்.

கடந்த காலங்களில் பல அரசியல் கைதிகள் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். இது போன்று நிபந்தனைகளின் அடிப்படையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசியல் கைதிகள் பிரச்சினை ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினையாக பார்க்காது, இதனை பொதுப் பிரச்சினையாகக் கருதவேண்டும்- என்றார்.





தமிழ் முற்போக்கு கூட்டணியின் அமைச்சர்கள் கண்டி மாவட்டத்தில் உள்ள மக்களின் குறைகளை ஆராயும் பொருட்டு கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பனர் வேலு குமாரின் தலைமையில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவரும் அமைச்சருமான பழனி திகாம்பரம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டபோது....

# கிழக்கு முதலமைச்சரின் முறைப்பாட்டுக்கு கல்விஅமைச்சர், ஆளுநர் பச்சைக்கொடி

(ஏ.எஸ்.எம்.தாணிஸ்)

கிழக்கு மாகாணத்தில் கடந்த வாரம் ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பட்டதாரிகளின் வயதெல்லை 35க்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மேற்கொண்ட முறைப்பாட்டு நடவடிக்கை தொடர்பில் சாதகமான முடிவுகள் கிடைத்துள்ளன என்று முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் நேற்று தெரிவித்தார்,

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பட்டதாரிகள் பலர் 35 வயதிற்கு மேற்படவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் வயதெல்லைக்கு ஏற்றால்போல் விண்ணப்பங்கள் கோரப்படவேண்டும் ஏன் என்றால் கடந்த கால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சரியான கல்வி கிடைக்காமை, இருப்பிட வசதி கிடைக்காமை, பாதுகாவலர்களின் இயலாமை, தாய், தந்தை மற்றும் உறவினர்களின் இழப்பு, பொருளாதாரம் மற்றும் இதர காரணங்களால் தமது கல்வியைத் தாமதப் படுத்தியமை காரணமாக மாணவர்கள் சிலர் காலம் கடந்து தமது பட்டப்படிப்பை முடித்துள்ளனர். எனவே அவர்களின் நலன்கருதி அவர்களைப் புறந்தள்ளி விடாமல் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் போது குறிப்பிட்ட மாணவர்களையும் உள்நுளைக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் விடுத்த கோரிக்கையை ஏற்ற பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஆளுனர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் இதற்கு பச்சைக் கொடி காட்டியிருப்பது சந்தோசமளிக்கிறது.

ஆகவே கடந்த வாரம் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் விண்ணப்பம் கோரப்பட்டமையில் குறிப்பிட்ட வயதெல்லையைத் தளர்த்தி அதில் மாற்றம் செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் இதற்காக ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.

# அக்கரைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட வீதிகளுக்கு காபட் இடும் நடவடிக்கை

(அக்கரைப்பற்று விசேட நிருபர்)

அம்பாரை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று வெள்ளப்பாதுகாப்பு வீதியிலிருந்து அம்பாரை வீதி வரை சுமார் 48 மில்லியன் ரூபா செலவிலும் அதேபோன்று பள்ளிக்குடியிருப்பு வில்லேஜ் வீதி சுமார் 18 மில்லியன் ரூபா செலவிலும், கார்பட் இடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான றவூப் ஹக்கீம் அண்மையில் உயர்கல்வி மற்றும் பெரும் தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவை சந்தித்து பேசிய போது இவ்வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்ட போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

# மினிப்பே கால்வாய் புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்



(சமீன்.முஹம்மட்)

மினிப்பே இடது கால்வாய் புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று திருமலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.அருள்ராசா தலைமையில் நடைபெற்றது.

மினிப்பே இடது கால்வாய் புனரமைப்பு வேலைத்திட்டமானது திருகோணமலை மாவட்ட அல்லை விவசாய திட்டத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தொடர்பில் அல்லை விவசாயிகள் தெரிவித்திருந்த நிலையில் அத்திட்டம் தொடர்பில் விவசாயிகளின் சந்தேகங்களை தீர்த்து வைக்கவே இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது அல்லை விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு நீர் கிடைப்பதனை உத்தரவாதப்படுத்துவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகைச் சாத்திடப்பட்டு அதற்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் வகைகூறும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று கலந்து கொண்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் விவசாயிகள் கருத்துக்களை தெரிவித்தனர். இத்திட்டம் தொடர்பில் விவசாயிகளோடு நெருக்கமான முறையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு செயற்படவுள்ளதாக இதன்போது நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.டபிள்யு.ரத்னாயக்க தெரிவித்தார். இந்நிகழ்வில் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே,திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மஹரூப், பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், கிழக்கு மாகாண காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, கிழக்கு மாகாண சபையின் திருமலை மாவட்ட உறுப்பினர்கள், நீர்ப்பாசன திணைக்களத்தின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# ரயிலுக்கு கல் வீசிய கும்பல்; உதவிக்கல்விப்பணிப்பாளர் பலி

(கலாவெவ நிருபர்)

ரயிலில் பயணித்த போது, கல் வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில், அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இவ்வாறு பலியானவர் வட மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் அனுராதபுரத்தைச் சேர்ந்த



49 வயதான கே.எல்.புஸ்பகுமார எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 3ம் திகதி பணி நிமித்தம், கொழும்புக்கு வந்த அவர், அதனை நிறைவு செய்ததும், கோட்டையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த ரயிலில், அனுராதபுரத்துக்குச் சென்று கொண்டிருந்த போது, ராகம ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து, வெளியில் இருந்து சிலர் விசிய கற்களால் தாக்கப்பட்டார். இதனால் அவரது தலையில் கடும் காயம் ஏற்பட்டது.

இந்தநிலையில் கடந்த ஐந்து தினங்களாக சுயநினைவின்றி வைத்தியசாலையில் இருந்த அவர், நேற்றுமுன்தினமிரவு மரணமடைந்தார்.

# வடமத்திய மாகாணத்தில் ஆங்கில ஆசிரிய நியமனம்

(அனுராதபுர நிருபர்)

வடமத்திய மாகாண அரசாங்க பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக வேண்டி புதிதாக ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேண்டி ஆங்கிலத்தில் தேசிய டிப்ளோமாவினை நிறைவு செய்த பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் (3-1) ஆம் தரத்திற்கு ஆங்கில ஆசிரியர்களாக இணைத்துக்கொள்வதற்கு வடமத்திய மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.



மூதூர் ஆணைச்சேனை மனாறுல் உலூம் குர்ஆன் மக்தப் மத்ரஸாவின் ஓராண்டு பூர்த்தியும் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மக்தப் மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிவைத்ததையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படத்தில் காணலாம். (படம்- ஏ.எஸ்.எம்.தாணிஸ்,எம்.என்.எம்.புஹாரி)

# முஸ்லிம்களின் முள்ளிவாய்க்காலாக அளுத்கமவை இலக்கு வைத்தது பேரினவாதம்

## கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா





(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கடந்த 30 வருட காலப் போரினால் ஏற்பட்ட உயிரிழப்பு, பொருளாதார அழிவுகளை விட தன்மானத்தையும் நம்பிக்கையையும் இழந்தது பெருத்த இழப்பாகும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வளவாளரும் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தருமான பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கிறீன் கார்டன் விடுதியில் இடம்பெற்ற நிலைமாற்று நீதிக்கான பொறிமுறைகளைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் அதிகாரி ஆர். மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், மற்றும் ஆய்வாளர்கள் உட்பட சுமார் 25 பேர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மூக்கையா, சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தொடங்கிய இனவாத நெருக்கடி 1983 இல் இடம்பெற்ற ஜூலைக் கலவரத்துடன் விஸ்வரூபமெடுத்தது.

அந்த இழப்புகளோடும், அழிவுகளோடும் இங்கு நிம்மதியாக வாழலாம் என்று சிறுபான்மையினருக்கிருந்த ஒரு சொட்டு நம்பிக்கையும் இழந்து போனது.

கடந்த கால யுத்தத்தினால் உயிரிழப்பைத் தவிர அனைத்தையும் ஈடு செய்ய முடியும் என்று ஒரு சாக்குப் போக்குச் சொன்னாலும் கூட யுத்தத்தினால் இழந்த தன்மானமும் நம்பிக்கையும் பாரிய இழப்பாகும்.

இதனை ஈடு செய்வதற்கு இனி எல்லோரும் இணைந்து ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

ஆயுத யுத்தம் என்பது அநாகரிகமானது. அது மனித குலத்திற்கு எதிரானது. கலகம் பிறந்தால்தான் நீதி பிறக்கும் என்பதெல்லாம் காட்டுமிராண்டித்தனமான கதைகள்.

கலகமே வேண்டாம் என்பதுதான் நல்லவர்களின் நவீன சிந்தனைப் போக்கு. இதனையே இலங்கையர்களாகிய நாம் கைக்கொண்டாக வேண்டும்.

தமிழர்களின் தலைவிதியை முள்ளிவாய்க்காலில் முடித்து வைத்து சாதனை படைத்து விட்டதாக புளகாங்கிதம் அடைந்த இனவாதிகள் அடுத்த சிறுபான்மையினரான முஸ்லிம்களின் முள்ளிவாய்க்காலாக அளுத்கமவை இலக்கு வைத்தது.

ஆனால், இதன் மூலம் அவர்கள் ஒன்றும் சாதித்து விடவில்லை. பொருளாதாரத்தையும், உயிர்களையும், தன்மானத்தையும், நம்பிக்கையையும் இழக்கச் செய்து சிறுபான்மை இனங்களைத் தலை குனிய வைக்கலாம் என்று நினைப்பது வெற்றியல்ல.

இந்த நாட்டிலே ஏற்பட்ட அத்தனை இழப்புக்களுக்கும் இந்த நாட்டிலே கோலோச்சிய அரசியல் அதிகாரத்தை தம் வசம் வைத்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவையே காரணமாகும் என்பதை வரலாறு சொல்கிறது.

எவ்வாறாயினும், ஆயுத முரண்பாடு முடிவுக்கு வரவேண்டும் என்ற சிந்தனை வலுத்ததால்தான் இந்தியா சர்வதேச ஆதரவுடன் இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவர உதவியது.

கடந்த காலம் என்பது ஒருபோதும் மறந்து விட முடியாத ஒன்று. அதனால், இலங்கையில் நடந்த அநீதிகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். அதன் மூலமாக பரஸ்பரப் புரிந்துணர்வுடன் இனப்பிரச்சினைக்கும் இழப்புக்களுக்கும் பரிகாரம் காணப்பட வேண்டும். நிரந்தர சமாதானத்திற்கு அதுவே வழியாகும். சிறுபான்மையினர் ஒற்றுமைப்படவேண்டியது காலத்தின் தேவையாகும்'' என்றார்.

## அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான செயலமர்வு

(மூதூர் முறாசில்)

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியலமைப்பு மாற்றமும் தேர்தல் சீர்திருத்தமும் தொடர்பிலான செயலமர்வொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (7) மூதூர் திரிசிடி மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.எப்.எம். ஷாபி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் எம்.எம்.அப்துல் றஹ்மான், பொதுச் செயலாளர் என்.நஜா முஹம்மட் ஆகியோர் கலந்து கொண்டு புதிய அரசியலமைப்பு, தேர்தல் சீர்திருத்தம் சம்பந்தமாக விளக்கமளித்ததோடு, நிகழ்வில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

## ஆசிரியரினால் மாணவி பாலியல் துஷ்பிரயோகம்

(கலாவெவ நிருபர் )

மேலதிக. வகுப்புக்குச் சென்ற 12 வயதுடைய பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட ஆசிரியர் ஒருவரை அனுராதபுரம் பொலிசார் கைது செய்துள்ளனர்

இவர் டியூசன் வகுப்பு நடாத்தும் இடத்திலே அம்மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதுடன் திருமணமான இவ்வாசிரியருக்கு பாடசாலை செல்லும் மகன் ஒருவரும் உள்ளதாக தெரிய வந்துள்ளது இவருக்கு எதிராக பாதிக்கப்பட்ட மாணவியும் அவருடைய தாயும் அனுராதபுரம் சிறுவர், மகளிர் பிரிவில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.பொலிசார் மேலதிக விசாரணைகளை தொடர்கின்றனர் .

## கொய்க்கா, ஆசியமன்ற அதிகாரிகள் கல்முனை விஜயம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ் பெரியநீலாவணை நிருபர்)

கொரியா நாட்டின், கொய்க்கா உயர் அதிகாரிகள் மற்றும் ஆசிய மன்றத்தின் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை மாநகரத்துக்கு நட்புறவு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது மாநகர ஆணையாளர் குழுவுக்கிடையிலான சந்திப்பு கல்முனை மாநகர செயலகத்தில் இடம்பெற்றது.வருகை தந்த உயரதிகாரிகள் பௌதீக ஆளணி வளங்கள், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

இதில் ஆசிய மன்றத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திருமதி. தினேஷா டி சில்வா விக்ரமநாயக்க, பணிப்பாளர் கோபகுமார் தம்பி, மாநகர ஆணையாளர் ஜெ. லியாக்கத் அலி, கிழக்கு மாகாண நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எம்.ஐ.எம். வலீத், உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். மாநகர எல்லைக்குள் கொரியா நாட்டு நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் கொய்க்கா வேலைத்திட்டங்களையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

## மக்களை ஏமாற்றி வாக்குப் பெற்ற கம்மன்பிலவினால் ஆட்சியை மாற்ற முடியாது

### மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேசப்பிரிய



(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

எமது நாட்டில் அடுத்த அரசாங்கத்தை 2020 இல் தான் தேர்ந்தெடுக்க முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை அரசியல் முட்டாள்களாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்ப வர்களிடம் கட்சி ஆதரவாளர்கள் ஏமாறக்கூடாது. எமது கட்சி ஆதரவாளர்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற உதயகம்மன்பிலவினால் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என முதலமைச்சர் இசுர தேசப்பிரிய கேள்வி எழுப்பினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (08) மேல் மாகாண முதலமைச்சரின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளார். நாட்டில் தேசிய அரசியல் இருப்பதாயின் அதன் கொள்கைளைப் பாதுகாத்தல் வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தை விடவும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியின் ஆட்சியில் ஜனநாயகம் மேலோங்கியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிகுந்த சக்தியுடன் களமிறங்கவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவாலிடும் வகையில் நாம் தேர்தலில் போட்டியிடுவோம். எமது கட்சியின் முன்வரும் மாநாடு வெகு விமரிசையாக இடம்பெறவுள்ளது. இதற்கான திட்டங்களை ஜனாதிபதி வகுத்துள்ளார். பாத யாத்திரையில் கலந்து கொண்டவர்களையும் மாநாட்டுக்கு அழைப்போம்.

எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிந்தனையுடன் செயற்படவேண்டும். சதிகாரர்களின் வலையில் சிக்கி முட்டாள்களாகிவிடக்கூடாது. தமது அரசியல் எதிர்காலத்துடன் இவர்கள் விளையாடக்கூடாது. தமது அரசியல் வாழ்க்கையை பாழாக்கிக் கொள்ளக் கூடாது எனவும் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். மேல் மாகாண அமைச்சர் காமினி திலகசிறியும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

## தகவலறியும் சட்டத்தை முறையாக அமுலாக்க கட்டமைப்பை உருவாக்கவும்

### நல்லாட்சி தவிசாளர் அப்துர் ரஹ்மான் வேண்டுகோள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தகவல் அறியும் சட்ட மூலத்தை முறையாக அமுல்படுத்துவதற்கான கட்டமைப்புகளை உருவாக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மிக நீண்ட காலமாக இலங்கையில் எதிர்பார்க்கப்பட்ட தகவல் அறியும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் கூட , இதனை அமுலுக்கு கொண்டு வருவதில் ஏற்படுத்தப்பட்ட தாமதம் கவலையளிக்கிறது. நல்லாட்சி என்பதன் அடிப்படைப் பண்புகளில் ஒன்று வெளிப்படைத் தன்மையாகும். அதற்கு நடைமுறை வடிவம் கொடுக்க வேண்டும் என்றால் தகவல் அறியும் சட்டம் என்பது மிகவும் அத்தியவசியமாகும். இந்த தகவல் அறியும் சட்டத்தின் பலனாகவே இந்தியாவில் பல ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் மோசடிகளை முறியடிக்க முடிந்திருக்கிறது.

அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை சட்ட பூர்வமாக இலங்கை மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல வருடங்களாக பலமாக முன் வைக்கப்பட்டு வந்துள்ளது.

இச்சட்ட மூலத்திற்கான அங்கீகாரம் அமைச்சரவை மட்டத்தில் சில வருடங்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் கிடப்பில் போடப்பட்டே வந்தன. இதன் பின்னணியிலேயே தற்போதைய ஜனாதிபதி அவர்களும் அரசாங்கமும் இச்சட்ட மூலத்தை உடனடியாக கொண்டு வருவதாக கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் அதற்குப் பிந்திய பொதுத் தேர்தல் காலத்திலும் தொடர்ச்சியான வாக்குறுதிகளை வழங்கி வந்தனர். அதனையும் அடிப்படையாகக் கொண்டே மக்கள் இந்த அரசாங்கத்திற்கான ஆதரவை வழங்கியிருந்தனர். இருப்பினும் 19 மாதங்கள் கடந்து விட்ட பின்னரே அது தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இது வெறும் சட்டமாக மாத்திரம் இருந்து விடாமல் இதன் நன்மைகளை மக்கள் நேரடியாக அனுபவிக்கக்கூடிய கட்டமைப்புகளை அரசாங்கம் காலதாமதமின்றி உடனடியாக உருவாக்க வேண்டும். அதன் மூலம் நல்லாட்சி தொடர்பான தமது அர்ப்பணத்தை அரசாங்கம் நிரூபிக்க முன்வர வேண்டும்.

அத்தோடு, இச்சட்டம் பற்றிய விரிவான விழிப்புணர்வுகளை மக்கள் பெற்று தத்தமது பிரதேசங்களில் நடைபெறும் அரச நிறுவனங்களில் இடம்பெறும் கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் என்பன தொடர்பில் இச்சட்ட மூலத்தைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்று ஊழல் மோசடிகளுக்கெதிராக குரல் கொடுக்கின்றவர்களாக மக்கள் மாற வேண்டும். அவ்வாறு தகவல் அறியும் சட்டத்தை பொதுமக்கள் பயன்படுத்துகின்றபோது மாத்திரமே அதன் முழுமையான நோக்கத்தை அடைய முடியும் என்பதோடு, நல்லாட்சி ஒன்றினை வலுப்படுத்தவும் முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## மாளிகைக்காட்டில் உலமாக்களுக்கு கௌரவம்





(யூ.கே.காலித்தீன், எம்.வை.அமீர்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் சாய்ந்தமருது - மாளிகைக்காடு கிளையின் ஏற்பாட்டில் அவ் அமைப்பின் தலைவர் அஷ்ஷேய்க் யூ.எல்.எம்.காசிம் (கியாதி) தலைமையில் கடந்த சனிக்கிழமை மாளிகைக்காடு பிஸ்மில்லாஹ் வரவேற்பு மண்டபத்தில் இப்பிராந்திய இளம் உலமாக்களை கௌரவித்து வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு ஜம்இய்யத்துல் உலமாவின் பிரதி தலைவர்களில் ஒருவரும், அல் ஹாமியா அரபுக்கல்லூரியின் பிரதி அதிபருமான அஷ்ஷேய்க் எம்.எம்.நபார், ஷர்கியா அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேய்க் எம்.எம்.எம்.சலீம் மற்றும் ஜம்இய்யத்துல் உலமா சபையின் முன்னாள் தலைவரும் சட்டத்தரணியுமான அஷ்ஷேய்க் என்.எம். அப்துல் முஜீப் உள்ளிட்டோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஒற்றுமையின் அடையாளமாக உலமாக்கள் ஒருவரையொருவர் கட்டித்தழுவி முஷாபஹா செய்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து இளம் உலமாக்களை கௌரவித்து நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் ஜம்இய்யத்துல் உலமாசபையின் நெறிப்படுத்தலில் இயங்குகின்ற சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தின் ஆறு ஜும்ஆ பள்ளிவாசல்களின் தலைவர்களும் மற்றும் அதன் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட்டோருக்கு எதிராக துருக்கியில் மாபெரும் பேரணி

## மில்லியன் கணக்கானோர் பங்கேற்பு





துருக்கியில், ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக, நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக மாபெரும் பேரணியொன்று இஸ்தான்புல் நகரில் நடைபெற்றது.

துருக்கியில் கடந்த மாதம் 15ஆம் திகதி இரவு இராணுவத்தின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி அர்துகானின் ஆட்சியை கவிழ்க்கும் சதி புரட்சியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அந்த இராணுவ புரட்சியை ஜனாதிபதி அர்துகானின் ஆதரவாளர்கள் முறியடித்தனர். இதில் 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக, நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக மாபெரும் பேரணியொன்று இஸ்தான்புல் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் ஒரு மில்லியன் பொதுக்கள் பங்கேற்றனர்.

இதில் ஆளும் கட்சி உட்பட பல்வேறு தரப்பினரை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர். அனைவரும் துருக்கியின் தேசிய கொடியினை ஏந்திய வண்ணம் இஸ்தான்புல் நகரில் கூடினர். இதன்போது 15 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

'ஜனநாயகம் மற்றும் தியாகிகள் பேரணி' என்று இது அழைக்கப்படுகிறது. இதில் மதத் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த இரண்டு பேர் கலந்து கொண்டனர். குர்திஷ் ஆதரவு மக்கள் ஜனநாயக கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதுபோன்ற மாபெரும் கூட்டமொன்றை இஸ்தான்புல் நகரில் இதற்கு முன் பார்த்ததில்லை என்று துருக்கி ஊடகங்கள் இதனை வர்ணித்துள்ளன.

# வெள்ளத்தில் மிதக்கும் பீகார்: உணவின்றி பலர் பரிதவிப்பு

**14 மாவட்டங்களில் 33 இலட்சம் பேர் பரிதவிப்பு**

**''உண்ணுவதற்கு எலிகளைத் தவிர வேறொன்றும் இல்லை''**



பீகார் மாநிலத்தில் தொடரும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் மாநிலத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு இதுவரை 95 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மாநிலத்தின் 14 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 33 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

6 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில் 2 இலட்சம் ஹெக்டேயர் பரப்பில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதுவரை 16,000இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் குடிசைகளை வெள்ளம் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. வெள்ளம் பாதித்த இடங்களில் படகுகளின் மூலம் மீட்புக் குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். வீடுகளை இழந்தவர்களுக்காக 464 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**உணவின்றி தவிக்கும் மக்கள்:**

பீகாரிலுள்ள ஒரு கிராம மக்கள், நதியின் நடுவே தீவில் அமைந்துள்ள தங்கள் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், தங்களுக்கு உண்ணுவதற்கு எலிகளைத் தவிர வேறொன்றும் இல்லை. அதிகாரிகளிடமிருந்து உணவு நிவாரணம் வரவில்லை: எதுவும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் முக்கிய பெரு நகரான கராச்சியில், வியாழக்கிழமையிலிருந்து மழை தொடர்பான சம்பவங்களில் இதுவரை 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகச் செய்திகள்

# அலெப்போ முற்றுகை நீக்கம் புரட்சி படைகள் முன்னேற்றம்

**வீதிகளில் மக்கள் வெற்றி கொண்டாட்டம்**



சிரியாவின் அலெப்போ நகர் ஒருவார கால உக்கிர போருக்கு பின் புரட்சிப் படையினர் வசமாகியுள்ளது. இதனையடுத்து இந்நகர மக்கள் வீதியில் இறங்கி மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிரியாவின் கேந்திரவியல் முக்கியத்துவம் வாய்ந்த அலெப்போ நகரை அந்நாட்டு ஜனாதிபதி பஷர் அல் - அஸாத்தின் படைகள் முற்றுகையிட்டிருந்தனர். இந்நிலையிலேயே சிரிய போராளிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் ஜனாதிபதி ஆதரவு படைகளும், ரஷ்ய படைகளும் பின்வாங்கியுள்ளன.

அலெப்போ நகரின் இராணுவத் தளங்களையும் இன்னும் பல முக்கிய பகுதிகளையும் புரட்சிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். அரச படையின் முற்றுகை நீக்கப்பட்டதனை அலெப்போ பொதுமக்கள் வீதியிலிறங்கி கொண்டாடி வருகின்றனர்.

புரட்சி படையினர் வெற்றிகுறித்து துருக்கியை மையமாகக் கொண்டு செயற்படும் சிரிய தேசிய கவுன்ஸில் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈரான் விஞ்ஞானிக்கு மரணதண்டனை நிறைவேற்றம்



ஈரானின் அணு உலைகள் மற்றும் அணு ஆயுத இரகசியங்களை அறிந்து வைத்திருந்த ஷாராம் அம்ரிக்கு அந்நாட்டு சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக தெரியவந்துள்ளது.

ஈரான் நாட்டில் உள்ள அணு மேம்பாட்டு ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றிவந்த ஷாராம் அம்ரி, ஈரானிலுள்ள அணு உலைகள் மற்றும் அணு ஆயுத இரகசியங்களை அமெரிக்காவுக்கு தெரிவித்ததாகவும் இவரைப்பற்றி உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இந்நிலையில், அவருக்கு தூக்குத்தண்டை நிறைவேற்றப்பட்டதை ஈரான் அரசு உறுதிப்படுத்தியுள்ளது. தூக்கிட்டு கொல்லப்பட்ட ஷாராம் அம்ரியின் உடல் அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

# குவெட்டாவில் குண்டுவெடிப்பு 60 பேர் பலி; 50 பேர் படுகாயம்

**அவசரநிலை பிரகடனம்; பீதியில் மக்கள்**





பாகிஸ்தானின் குவெட்டா நகரிலுள்ள வைத்தியசாலையில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 60 பேர் உயிரிழந்துள்ளதுடன். 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானில் வன்முறைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ள பலூசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவில் பார் அசோசியேசன் தலைவர் பிலால் அன்வர் காசி நேற்று மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மன்னோ வீதியில் அருகே அவரது காரை குறிவைத்து மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவரை சக வழக்கறிஞர்கள் குவெட்டா அரச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அவர் சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த ஏராளமான வழக்கறிஞர்களும், பத்திரிகையாளர்களும் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு பகுதியில் திரண்டிருந்த போது, அங்கு சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. 60 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் ஜியோ நியூஸ் தெரிவித்துள்ளது.

இதனால் வைத்தியசாலை வளாகத்தில் பெரும் பதட்டம் நிலவியது. பொதுமக்கள் பீதியில் அங்குமிங்கும் ஓட்டம் பிடித்தனர். இதையடுத்து அப்பகுதி முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு, அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்து.



**(திருச்சி சாஹுல் ஹமீது)**
**ராஜஸ்தான், பில்வரா மாவட்டத்திலுள்ள ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் 50 பாடசாலை குழந்தைகளுடன் பஸ்ஸொன்று இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.**

காஷ்மீருக்காக...

# அணுஆயுதங்களை பயன்படுத்த நேரிடும்

**ஹிஸ்புல் முஜாகிதீன் பகிரங்க மிரட்டல்**

காஷ்மீருக்காக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே அணுஆயுதப் போர் நடக்க அதிக வாய்ப்புள்ளதாக ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து செயற்படும் ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பின் தளபதி சையத் சலாஹுதீன் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

''கலவரங்களால் காஷ்மீர் கொந்தளிப்பில் உள்ளது என்று கூறிய அவர், அங்குள்ள மக்களுக்கு ஆயுதம் ஏந்தி போராடுவதை தவிர தற்போதைக்கு வேறு வழியில்லை.

சர்வதேச சமுதாயமோ, அமைப்புகளோ தங்கள் கடமைகளை இவ்விவகாரத்தில் சரிவர செய்யவில்லை.

மோடி அரசும் விடாப்பிடியாக உள்ளது. இச்சூழலில் காஷ்மீர் மக்கள் அடங்கியிருக்க தயாராக இல்லை. அவர்கள் புதிய பரிமாணத்தில் நுழைய தயாராகி விட்டார்கள். இது இந்தியாவிற்கு மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும்'' என எச்சரித்துள்ளார்.

காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாகிதீன் தலைவர்களில் ஒருவரான புர்ஹான் வானி சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து, கடந்த 1 மாத காலமாக அங்கு வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன . இதுவரை அங்கு கலவரத்திற்கு 55 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.






வெட்டுக்கிளி (அட்டாளைச்சேனை) எம்.ஏ.ஏ. சாஜித்



சூரியோதயம் (விருத்தோடை) சல்மானுல் பாரிஸ்



மலர் (பேருவளை) பர்ஹா பாஹிம்





இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் விமானப்படை தளபதி எயர் சீவ் மார்ஷல் சொஹைல் அமானை பிரதமர் ரனில் விக்கிரமசிங்க வரவேற்பதையும், கலந்துரையாடுவதையும், நினைவுச் சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# அளுத்கம அட்டூழியங்களுக்காக நீதிகேட்டு கொதித்தெழுந்தவர் றிசாத் பதியுதீனே

## முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் தெரிவிப்பு



(சுஐப் எம். காசிம்)

அளுத்கம பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு அட்டூழியங்கள் இடம்பெற்று சுமார் இரண்டு வாரங்களின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோரை அழைத்து கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக நியாயம் கேட்டு கொதித்தெழுந்து, நாட்டுத்தலைவரையே நிலைகுலையச் செய்தவர் அமைச்சர் றிசாத் பதியுதீனே, என்று முன்னாள் அமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பன்னூலாசிரியர் எம்.எம்.எம்.நூறுல் ஹக் எழுதிய 'முஸ்லிம் அரசியலின் இயலாமை' எனும் நூல் வெளியீட்டு விழா கொழும்பு, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் இடம்பெற்ற போது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பிரபா கணேசன் மேலும் கூறியதாவது:

முஸ்லிம் அரசியலின் இயலாமை என்ற இந்த நூலின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது எனக்கு றிசாத் பதியுதீனின் துணிச்சலும், சமூக உணர்வும் நினைவுக்கு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அப்போது நடத்திய அந்தக் கூட்டத்தில் றிசாத் பதியுதீன் துணிவுடன் எழுந்து முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், அநியாயங்களையும் தட்டிக்கேட்டார்.

அந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, றிஷாத் பதியுதீனை எதிர்த்து முரண்பட்ட போது, இருவருக்குமிடையிலே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் பாரியளவில் வெடித்துக் கைகலப்பாக மாறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது. அப்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தனது ஆசனத்தை விட்டு எழுந்து கைகளைக்காட்டி இருவரையும் அமரச்செய்தார். இந்த வாக்குவாதத்தில் றிசாத் பதியுதீனுக்காக குரல் கொடுத்தவர் அப்போதைய அமைச்சரும், தற்போதைய எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார மாத்திரமே. றிஷாத்தின் சமூக உணர்வைக்கண்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

அமைச்சர் றிசாத் எனது நல்ல நண்பரும் கூட. அவர் இந்தச் சபையில் இருப்பதற்காக நான் இந்த விடயத்தை இங்கு கூறவில்லை. மேல்மாகாண சபைத் தேர்தலில் எனது கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணி, அவரது கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டதை நான் நன்றியுடன் நினைவுகூரவிரும்புகிறேன்.

கடந்த ஆட்சியில் முஸ்லிம்கள் உட்பட ஏனைய சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பல்வேறு அநீதிகள், அக்கிரமங்கள் நடந்தன. எனினும் அப்போது எங்கள் எதிரியை நேரடியாக எம்மால் காணமுடிந்தது. அவர்களை அடையாளப்படுத்தவும் முடிந்தது. இந்த நல்லாட்சியில் எமக்கெதிராகச் செயற்படும் எதிரிகளை எம்மால் இனங்காண முடியாதுள்ளது. அடையாளப்படுத்த முடியாதிருக்கின்றது.

சிறுபான்மைக் கட்சிகள் இந்த விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென நான் வேண்டுகோள் விடுப்பதுடன், இந்த ஆட்சி தொடர்பில் இருக்கும் ஒருவித மாயையில் இருந்து நாம் தெளிவு பெற வேண்டும் எனவும் இந்தச் சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கின்றேன்.

# குவாஸி நீதிபதிகள் மன்ற தலைவராக பௌஸ் மௌலவி

ஸ்ரீ லங்கா குவாஸி நீதிபதிகள் மன்றத்தின் பொதுக்கூட்டம் மற்றும் நிர்வாகக் குழு தெரிவு ஆகியன கடந்த ஞாயிறன்று (31) மருதானை ஜம்இய்யதுஸ் ஷபாப் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதனடிப்படையில் ஸ்ரீ லங்கா குவாஸி நீதிபதிகள் மன்றத்தின் தலைவராக அஷ்ஷெய்க் ஏ.எல்.ஏ.எம். பௌஸ் மற்றும் உப தலைவர்களாக டாக்டர் ஐ.எம். ஷெரீப், எம்.வை.எம். இப்ஹாம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பொதுச் செயலாளராக சட்டத்தரணி ஹுசைன் அஸ்ஹர் சைனுன், உதவித் செயலாளராக அஷ்ஷெய்க் கலீலுர் ரஹீம் ஆகியோரும் தனாதிகாரியாக யூ.எல். அஹமத் லெப்பேயும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஸ்ரீ லங்கா குவாஸி நீதிபதிகள் மன்றத்தின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக ஏ.ஆர்.ஏ.பரீல், அஷ்ஷெய்க் எம்.சீ.இஷாக் லெப்பே, அஷ்ஷெய்க் எச்.எம். எம். இல்யாஸ், அஷ்ஷெய்க் ஏ.எல்.ஏ.கப்பார், அஷ்ஷெய்க் எம்.எப். எம்.மிதுருக், எஸ்.ஏ.எஸ்.நய்னா முஹம்மத், அஷ்ஷெய்க் எம்.எம்.ஸபீர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## பொரலஸ்கமுவ பள்ளி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெரிசன் நேற்று தெரிவித்தார்.

பொரலஸ்கமுவ பள்ளிவாசல் இனந்தெரியாத இருவரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சனியன்று அதிகாலை ஒருமணியளவில் இனந்தெரியாத இருவர் பொரலஸ்கமுவ பள்ளிவாசலின் இரு வாயிற் கதவுகளையும் உடைத்துக்கொண்டு பள்ளிவாசலினுட்புகுந்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதன்போது பள்ளிவாசலில் இருந்த முஅத்தினும் தாக்கப்பட்டு காயத்துக்குள்ளானார். பள்ளிவாசலில் இருந்த தொழுகை நேரசூசி, மின் விசிறி போன்றவற்றையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். பள்ளிவாசலுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றையும் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்ததாவது,

பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எமக்கு அறியக் கிடைத்தவுடன் நாம் அங்கு சென்றுபார்வையிட்டோம். இது ஒரு திட்டமிட்ட செயற்பாடா? அல்லது இனவாத செயற்பாடா? என்று இதுவரை கூறு முடியாதுள்ளது. மேலதிக பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளோம்.

இந்த தாக்குதல் சம்பவத்துக்கு சம்பந்தப்பட்டவர்களை இனங்காண்பதற்கு சி.சி.ரீ.வி. காட்சிகளை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளோம். இந்த சம்பவம் அங்குள்ள இரு சி.சி.ரீ.வி. கமராக்களில் பதிந்திருக்கலாம் என சந்தேகிக்கிறோம். நாளை (இன்று) நீதிமன்ற தீர்ப்பைப் பெற்ற பின்னரே மேலதிக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவலொன்று வெளியாகியுள்ளது.

## இலங்கை வருகிறார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் கலந்துகொள்ளவே அவர் இலங்கை வரவுள்ளதாக தெரியவருகிறது.

இந்த மாநாட்டில் தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவை பிரதிநிதித்துவப்படுத்தி 17 நாடுகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விடுதலையை வலியுறுத்தி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

நீண்ட காலமாக எவ்வித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை உடடியாக விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்கு விசாரணைகளையேனும் துரிதப்படுத்த வேண்டும் என்றே இவர்கள் அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அத்தோடு, இவர்களது கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றும் எதிர்க்கட்சித் தலைவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இவர்களது விடுதலையை வலியுறுத்தி நேற்று முற்பகல் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, 2012 ஆம் அண்டு படுகொலை செய்யப்பட்ட டெல்ருக்ஷனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தையொட்டியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இதில் மதத்தலைவர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், சமூக ஆவலர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுத்தினர்.

## மலேரியா அற்ற நாடாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று தெரிவித்தார்.

அத்தோடு, சின்னம்மை நோயினை 2020 ஆம் ஆண்டிலும் ருபேல்லா நோயினை இன்னும் இரண்டு வருடங்களிலும் நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரக் கல்விப் பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே இவர் இதனை குறிப்பிட்டார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

1983 ஆம் ஆண்டு போலியோ நோயினை நாட்டிலிருந்து முழுமையாக அழித்தோம். இதனைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யானைக்கால் நோயற்ற நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், மலேரியா அற்ற நோயற்ற நாடாக வெகுவிரைவில் இலங்கை பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஆய்வுகள் தற்போது உலக சுகாதார அமைப்பின் பணிப்புக்கமைய இலங்கையில் இடம்பெற்றும் வருகின்றது. ஆகவே, எதிர்வரும் செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை இலங்கையில் இடம்பெறவுள்ள பிராந்திய நாடுகளின் சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் இலங்கை மேற்கண்டவாறு பிரகடனப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக நாடுகளை பல்வேறு கட்டங்களில் அச்சுறுத்திய மோசமான தொற்று நோய்களிலிருந்து இலங்கை தற்போது கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டுவருகின்றது.

அந்தவகையில், 2020 ஆம் ஆண்டளவில் சின்னம்மை நோயினையும் இன்னும் இரண்டு வருடங்களில் ருபேல்லா நோயினையும் இங்கிருந்து முற்றாக அழிப்போம் என்றார்.

# பொரளை, மாதம்பிட்டிய பொது மயானங்களை அபிவிருத்தி செய்க

## அதிகாரிகளுக்கு அமைச்சர் பைசர் உத்தரவு



பொரளை மற்றும் மாதம்பிட்டிய பொது மயானங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்கும், பொது சுகாதார திணைக்களம் மற்றும் பிரதான வைத்திய அதிகாரி விஜயமுனிக்கும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா உத்தரவு பிறப்பித்தார்.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் பைசர் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அதிகாரிகளுடன் நடந்த கலந்துரையாடலிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

48 ஏக்கர்களை கொண்ட இலங்கையின் பெரியளவிலான பொது மயானமான பொரளை மயானத்தில் ஒருநாளைக்கு 10 -15 சடலங்கள் அடக்கம் செய்யப்படுகின்றது. குறித்த மயானத்தில் சேவையாளர்கள் மற்றும் காவலாளிகள் மதிப்பிடமுடியாத நிலையில் உள்ளதோடு, அவர்களுக்கு இளைப்பாறும் அறையொன்றும் இல்லாதது ஒரு பாரிய பிரச்சினையாகும். தற்போது இளைப்பாறும் அறையாக கஞ்சிய அறையையே பாவித்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். எனவே, உடனடியாக தேவையான வேலையாட்களை சேர்ப்பதோடு, இளைப்பாறும் அறையையும் உடனடியாக செய்து கொடுக்கும்படியும் அமைச்சர் உத்தரவிட்டார்.

மேலும், கழிவறைப்பிரச்சினைகளும் உள்ளன. மக்கள் பாவனைக்காக இரண்டு கழிப்பறைகள் உள்ளபோதிலும், அதில் ஒன்று கதவு இல்லாமலும் உள்ளது. பொதுமக்களின் பாவனைக்காக நீர் வசதியும் இல்லை. இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகளை நிவர்த்தி செய்வது நமது கடமையாகும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதேவேளை மாதம்பிட்டிய பொதுமயானம் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## தேர்தல் தொகுதிகளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிறு கட்சிகள் சார்பில் 165 தேர்தற் தொகுதிகளை 200 ஆக அதிகரிக்க வேண்டுமென்ற பிரேரணை முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் நவமணிக்கு தெரிவித்தார்.

இது தவிர, பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பிரேரணையும் முன்வைக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மிக விரைவாக சிறுபான்மை சிறு கட்சிகளது கருத்துக்களை முன்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளதால் அதற்கான கலந்துரையாடல்களை இந்த வாரத்திற்குள்ளே நடத்தி அறிக்கையை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் ஹக்கீம் நவமணிக்கு தெரிவித்தார்.

## காணாமல்போனோர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

50 பக்கங்களைக் கொண்ட இதில், 90 களுக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், இறுதி யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக ஆணையாளர் மெக்ஸ்வெல் பரணகம நேற்றுத் தெரிவித்தார்.

அத்தோடு, இந்த அறிக்கை சமர்ப்பிப்புடன் தனது ஆணையகத்தில் காலத்தை முடித்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கையானது இடைக்கால அறிக்கையாகவே சமர்ப்பிக்கப்படும். ஏனெனில், எமக்கு வழங்கப்பட்ட கால எல்லையும் நாம் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட காலமும் மிகவும் குறுகிய ஒன்றாகவே இருக்கின்றது.

இதற்குள் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது என்பது முடியாத காரியமாகும். இதனால், கடந்த இரண்டறை வருடங்களில் நாம் மேற்கொண்ட அமர்வுகளின் விபரங்களையே இந்த இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மேலும், இதிலுள்ள சில விடயங்கள், இவ்வரசினால் அமைக்கப்படவுள்ள காணாமற்போனோர் தொடர்பிலான புதிய ஆணைக்குழுவுக்கும் சற்று உதவியாக இருக்கலாம் என்றும் பரணகம தெரிவித்தார்.

## எஸ்.ரீ.எப். தளபதியாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எம்.ஆர். லத்தீப் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஒன்றுகூடிய பொலிஸ் ஆணையகம் இத்தீர்மானத்தை மேற்கொண்டதாக அதன் செயலாளர் ஆரியதாச குரே நவமணிக்கு தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப்பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரஞ்சித் பெரேரா, இன்று ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள நிலையில், புதிய கட்டளைத் தளபதியாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லத்தீப் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கடந்த மாதம் 4ஆம் திகதி பிரேசில் நாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சீனி பொதிகளைக் கொண்ட கொள்கலனில் மறைத்துவைக்கப்பட்டு கொழும்பு துறைமுகத்திலிருந்து வெளியேற்றுவதற்கு தயாராகவிருந்த ஒரு கோடி ரூபா பெறுமதியான கொகேன் போதைப்பொருள் அடங்கிய கொள்கலனை கைதுசெய்வதற்கு பிரதி பொலிஸ்மா அதிபர் ரஞ்சித் பெரேராவின் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சுற்றிவளைப்பே காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எட்கா ஒப்பந்தம்: இந்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வருகைதரவுள்ளனர்.

இலங்கை இந்தியாவுக்கிடையிலான பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் கைச்சாத்திட திட்டமிட்டுள்ளதாக பொருளாதார ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்திருந்தார்.

இதன் ஒரு கட்டமாகவே இலங்கை இந்திய பிரதிநிதிகளிடையே இன்றும் நாளையும் இருதரப்பு பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இந்திய பிரதிநிதிகள் குழுவின் வருகை கடந்த ஜூலை 20ஆம் திகதியன்று இடம்பெறவிருந்தது. எனினும் இது இந்த மாதத்துக்கு பிற்போடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இந்திய பிரதிநிதிகள் குழுவுக்கு அந்நாட்டு வணிகத்துறை அமைச்சின் இணை செயலாளர் புபீந்தர் பஹாலா தலைமை தாங்கவுள்ளார்.

இந்த சந்திப்பை அடுத்து இரண்டாவது சந்திப்பு இந்தியாவில் இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றாவதும் இறுதியுமான சந்திப்பு இலங்கையில் இடம்பெறவுள்ளது. இந்த பேச்சுவார்த்தைகள் சாத்தியப்படுமிடத்து இந்த வருட இறுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

# ஆசிய வலைப்பந்தாட்டத்தில் இலங்கைக்கு இரண்டாமிடம்



(பீ.எப்.எம் றிஷாட்)

10ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மலேஷிய அணி சம்பியனாகியதுடன் இலங்கை அணி தொடர்ச்சியாக 3ஆவது தடவையாக இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.தாய்லாந்தின் பேங்கொக் நகரில் 10ஆவது வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடைபெற்றன. 9 நாடுகள் பங்கு பற்றிய இச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.முன்னாள் சம்பியன்களான இலங்கையும் மலேஷியாவும் இப்போட்டியில் மோதின. இதில் 41: 31 கோல் விகிதத்தில் மலேஷிய அணி வென்றது. முதல் பாதி ஆட்டத்தில் 17:13 கோல் விகிதத்தில் மலேஷியா முன்னிலையில் இருந்தது.1985 ஆம் ஆண்டு தனது சொந்த நாட்டில் நடைபெற்ற முதலாவது ஆசிய வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மலேஷிய அணி சம்பியனாகியது. அதன்பின் தற்போது இரண்டாவது தடவையாக அவ்வணி சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.இத்தொடரின் முதல் சுற்று ஆட்டமொன்றிலும் இலங்கை அணியை மலேஷியா வென்றமை குறிப்பிடத்தக்கது.இதேவேளை, இலங்கை அணி 1989, 1997, 2001, 2009, ஆகிய ஆண்டுகளில் சம்பியனாகியிருந்தது. இதற்குமுன் இறுதியாக 2012, 2014 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு தடவைகள் சம்பியனான சிங்கப்பூர் அணியை அரையிறுதியில் 36: 30 கோல் விகிதத்தில் இலங்கை அணி வென்றிருந்தது.இதனால், 1997 ஆம் ஆண்டின் பின்னர் முதல் தடவையாக சிங்கப்பூர் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறத் தவறியது.

3 ஆம் இடத்துக்கான போட்டியில் ஹொங்கொங் அணியை சிங்கப்பூர் அணி 34:27 கோல்கள் விகிதத்தில் வென்றது. இந்நிலையில், 11ஆவது ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.





விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடந்த வெள்ளிக்கிழமை பிரேசிலின் றியோ டி ஜெனீரோவில் உள்ள புகழ்மிக்க இயேசு நாதரின் உருவச்சிலைக்கு முன்னால் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் அனைத்து நாடுகளின் விளையாட்டுத்துறை அமைச்சர்களின் விசேட சந்திப்பில் கலந்துகொண்டார்.இதன்போது பிரேசிலின் விளையாட்டுத்துறை அமைச்சர் லியனாடோ பிகியானி அமைச்சருக்கு விசேட வரவேற்பு வழங்கியிருந்ததுடன், கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.அத்துடன் 2020 ஜப்பான் ஒலிம்பிக் போட்டிகளின் தலைவரும், அந்நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சருமான தமாய்யோ மருகாவாவுடனான சிநேகபூர்வமான கலந்துரையாடலொன்றை மேற்கொண்ட அமைச்சர் தயாசிறி ஜயசேகர,எதிர்வரும் 2020 ஒலிம்பிக் போட்டிகளுக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிக வீரர்களை பங்குபற்றச் செய்யவும், அவர்களுக்கான பயிற்சிகளை ஜப்பானில் பெற்றுக்கொடுக்கவும் சம்மதம் தெரிவித்தார். (பிரசன்ன அதிகாரி)

# ஜமைக்கா டலவாஸ் சம்பியனானது



கரிபியன் பிரிமியர் லீக் தொடரின் 2016ஆம் ஆண்டிற்கான சம்பியன் கிண்ணத்தை க்றிஸ் கெயில் தலைமையிலான ஜமைக்கா டலவாஸ் அணி கைப்பற்றியுள்ளது.கரிபியன் பிரிமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டி நேற்று வோர்னர் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ஜமைக்கா டலவாஸ் மற்றும் அமேசன் வொரியர்ஸ் ஆகிய அணிகள் மோதின.இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அமேசன் வொரியர்ஸ் அணி 16.1 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 93 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.அமேசன் வொரியர்ஸ் அணி சார்பில் தன்வீர் 42 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.ஜமைக்கா டலவாஸ் அணி சார்பில் இமாத் வசிம் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய டலவாஸ் அணி 12.5 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது. டலவாஸ் அணி சார்பில் கெயில் 54 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.இறுதியில் அவ்வணி ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக இமாத் வசீம் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் சிறப்பாட்டக்காரராக கரீபியன் ப்ரீமியர் லீக்கில் முதலாவது சதமடித்த டலவாஸ் அணியின் அன்ட்ரூ ரஸல்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

# பிரேசிலுக்கு ஏமாற்றமளித்து சாதனை படைத்த ஈராக்



றியோ ஒலிம்பிக் கால்பந்து போட்டிகளில் ஏ பிரிவில் இடம் பெற்றுள்ள நெய்மர் தலைமையிலான பிரேசில் அணி பங்குபற்றிய போட்டியிலும் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்தது.நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் பிரபல பிரேசில் அணியுடன் ஈராக் அணி மோதியது. ஆரம்ப முதல் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பிரபல பிரேசில் அணியைவிட நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை ஈராக் அணி வீரர்கள் நிரூபித்தனர். சுமார் 60, 000 ரசிகர்களுக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிக்கட்டத்தில் விரக்தியடைந்த பிரேசில் ரசிகர்கள் கேலி செய்யும் விதமாக ஈராக் அணிக்கு ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே இறுதி நிமிடம் வரை கோல் பெற்றுக்கொள்ள முயற்சித்த நெய்மர் தலைமையிலான பிரேசில் அணிக்கு தாம் பங்குபற்றிய 2ஆவது போட்டியிலும் ஏமாற்றமே மிஞ்சியது.ஆனால் பிரபல பிரேசில் அணியுடனான போட்டி சமநிலையில் நிறைவடைந்தமை ஈராக் அணி சர்வதேச கால்பந்து அரங்கில் பெற்ற மிகப் பெரிய சாதனை வெற்றியென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி,தனது தொடக்க ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுடன் மோதிய பிரேசில் அணி, கோல் ஏதும் போடாமல் (0-0) சமனிலையில் முடிந்தது-இதன்காரணமாக ஏ பிரிவில் 2ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்ட அவ்வணி, நாளை டென்மார்க் அணியுடன் நடைபெறவுள்ள தீர்மானமிக்கப் போட்டியில் வெற்றிபெற வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது.

# ஆஸியில் விளையாடும் இலங்கை

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இலங்கை அணி அவுஸ்திரேலியாவிற்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.இதன்படி 3 போட்டிகளைக் கொண்ட 20க்கு 20 போட்டியில் விளையாடவுள்ள இலங்கை அணி, அவுஸ்திரேலியாவின் 11ஆவது புதிய கிரிக்கெட் மைதானமான வோங்ஸ் கார்டினியா பார்க்கில் முதல் போட்டியில் களமிறங்கவுள்ளதுடன் இப்போட்டி பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறவுள்ளது.அதனைத்தொடர்ந்து 19 மற்றும் 22ஆம் திகதிகளில் மெல்பேர்ன், அடிலெய்ட் மைதானங்களில் எஞ்சிய போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கான நீச்சலில் கிமிகோவின் வாய்ப்பு பறிபோனது

(பீ.எப்.எம் றிஷாட்)

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில்,இலங்கை பங்குபற்றிய முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.இதில் பெண்களுக்கான 100 மீற்றர் பின்நோக்கிய நீச்சல் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்றில் இலங்கை வீராங்கனையான கிமிகோ ரஹீம் நான்காவது இடத்தைப் பெற்று காலிறுதி வாய்ப்பை இழந்தார். அவர் 100 மீற்றர் தூரத்தை 1:04:21 என்ற நேரக்கணக்கில் கடந்திருந்தார்.குறித்த நேரத்தின் பிரகாரம், அவர் 34 வீராங்கனைகள் பங்குபற்றிய மொத்தப்பட்டியலில் 28ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

17 வயதான கிமிகோ ரஹீம், இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற்ற தெற்காசிய போட்டிகளில், 100 மீற்றர் பின்நோக்கிய நீச்சல் போட்டியில், குறித்த தூரத்தை 1:03:78 என்ற நேரக்கணக்கில் கடந்திருந்ததுடன், அது அவரின் சிறப்பான நேர பெறுதியாகவும் பதிவாகியிருந்தது.அத்துடன்,தெற்காசிய விளையாட்டு விழாவில் 5 தங்கப்பதக்கங்களை வென்ற கிமிகோ, தெற்காசியாவின் அதிவேக நீச்சல் வீராங்கனையாகவும் மாறினார்.ஆனாலும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளம் வயதிலே ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட கிமிகோ எதிர்வரும் காலங்களில் இன்னும் சிறப்பாக செயற்பாடுவார் என அவரின் பயிற்சியாளர் மனோஜ் அபேசிங்க தெரிவித்தார்.

இதேவேளை ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் மூன்றாம் நாளான நேற்று இலங்கையைச் சேர்ந்த மூவர் முதல் சுற்று போட்டிகளில் பங்குபற்றினர்.இதன்படி, ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் சுதேஷ் பீரிஸும், 10 மீற்றர் காற்றழுத்து துப்பாக்கியால் குறிபார்த்து சுடும் போட்டியில் மங்கள சமரக்கோனும், அத்துடன்,ஆண்களுக்கான 73 கிலோ கிராம் எடைப் பிரிவில் இலங்கையின் ஜூடோக்கா சாமர நுவன் தர்மவர்தனவும் பங்குபற்றினர். இந்நிலையில் இன்று இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆண்களுக்கான 100 மீற்றர் ப்ரி ஸ்டைல் freestyle நீச்சல் போட்டியில் தெற்காசியவின் அதிவேக நீச்சல் வீரரான மெத்யூ அபேசிங்க களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெல்ப்ஸின் 19ஆவது தங்கம்



கடந்த லண்டன் ஒலிம்பிக் போட்டி வரை, அமெரிக்க நீச்சல் வீரர் மைகேல் பெல்ப்ஸின் கணக்கில் 18 தங்கம் உட்பட 22 பதக்கங்கள் இருந்தன. அத்துடன், லண்டன் ஒலிம்பிக்குடன் ஓய்வு பெறுவதாக பெல்ப்ஸ் அறிவித்தார்.அதனை தொடர்ந்து பெல்ப்ஸின் பங்குபற்றுதலின்றி கடந்த 2013ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற உலகச் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துக் கொண்ட அமெரிக்க அணி, தொடர் நீச்சல் போட்டியில் பிரான்ஸ் அணியிடம் தோல்வியடைந்து, வெள்ளிப் பதக்கத்தோடு நாடு திரும்பியது.இதையடுத்து, மீண்டும் போட்டிகளில் கலந்துக் கொள்வதாக 2014ஆம் ஆண்டு பெல்பஸ் அறிவித்தார்.ரியோவில் நேற்றுமுன்தினம் 4★100 மீற்றர் பிரீஸ்டைல் தொடர் நீச்சலில் அமெரிக்கக் அணி 3:9:92 விநாடிகளில் கடந்து தங்கத்தை தட்டி சென்றது.இதன்படி பெல்ப்ஸ் ஒலிம்பிக் அரங்கில் 19ஆவது தங்கத்தை கவிகரித்துக் கொண்டார்.

## கண்ணீருடன் வெளியேறினார் ஜொகோவிச்



ரியோ ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் போட்டியிட்ட உலகின் முதல்தர டென்னிஸ் வீரர் நொவெக் ஜொகோவிச் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்து ஒலிம்பிக் போட்டியிலிருந்து கண்ணீருடன் வெளியேறினார்.

ஜேர்மனி வீரர் டெல் பெட்ரோ ஜுவன் பெட்ரோவிடம் 2-0 என தோல்வியடைந்து வெளியேறினார்.இந்நிலையில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற பீஜிங் ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் டெல் பெட்ரோவிடம் நொவெக் ஜொகோவிச் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வில்லியம்ஸ் சகோதரிகளுக்கு தோல்வி

டென்னிஸ் போட்டிகளில் அமெரிக்காவின் நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்கிவரும் செரினா-வீனஸ் வில்லியம்ஸ் ஜோடி, ரியோ-2016 ஒலிம்பிக் போட்டியின் முதல் சுற்றிலேயே வெளியேறியமையானது இரசிகர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.முதல் சுற்றில் செக் குடியரசின் லூசி சஃபரோவா, பார்பொரா ஸ்ட்ரைகோவா ஜோடியை எதிர்கொண்ட செரினா-வீனஸ் வில்லியம்ஸ் ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறியுள்ளது.வில்லியம்ஸ் ஜோடி, இதற்கு முன்னர் சிட்னி, பீஜிங் மற்றும் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றி மூன்று முறை இரட்டையர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மெத்யூ இன்று களமிறங்குகிறார்



கிமிகோ ரஹீம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேச ஒலிம்பிக் சபையினால் அங்கிகரிக்கப்பட்டது. அதன்படி இம்முறை முதல் முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்ற கொசோவா, தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.பெண்களுக்கான ஜூடோ 52 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற மஜ்லிண்டா, இறுதிப் போட்டியில், இத்தாலி வீராங்கனை ஒடிட் கியுஃபிரிடாவை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.இதன் மூலம் ஒலிம்பிக்கில் முதல் முறையாக பங்கேற்ற கொசோவா நாட்டுக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக சாதனை படைத்த ஆடம்

பிரேஸின் றியோ டி ஜெனீரோவில் நடைபெற்று வரும், 31வது ஒலிம்பிக் திருவிழாவில், ஆண்கள் 100 மீற்றர் பிரஸ்ட்ஸ்டோக் தகுதிச் சுற்றுப் போட்டியில், பிரித்தானிய வீரர் ஆடம் பியாட்டி, இதற்கு முன்னதாக அவரே நிகழ்த்தியிருந்த சொந்த



சாதனையை அவரே முறியடித்துள்ளார். ஆடம் பியாட்டி, இப்போட்டியில், 57.55 நிமிடங்களில் எல்லைக் கோட்டை எட்டி அரையிறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். மேலும் தனது முந்தைய உலக சாதனையான 57.92 நிமிடம் என்பதை அவரே முறியடித்துள்ளார்.இதேவேளை நேற்றுமுன்தினம் நடைபெற்ற இதன் இறுதிப்போட்டியில் மீண்டும் தனது போட்டித்தூரத்தை முறியடித்து உலக சாதனை படைத்த ஆடம், பிரித்தானிய அணிக்காக இம்முறை ஒலிம்பிக்கில் முதலாவது தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்த வீரராகவும் மாறினார்.

## முதல் தங்கம் வென்றது கொசோவா



கொசோவா நாட்டிற்கான முதல் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்து அந்நாட்டின் ஜூடோ வீராங்கனை மஜ்லிண்டா கெல்மெண்டி, ரியோ-2016 ஒலிம்பிக் போட்டியில் வரலாற்று சாதனை படைத்துள்ளார்.கடந்த 2008ஆம் ஆண்டு செர்பியாவில் இருந்து பிரிந்து தன்னை தனி நாடாக பிரகடனப்படுத்திய கொசோவா, கடந்த

## அமெரிக்கா தொடர்ந்தும் முன்னிலை

பிரேஸிலில் ரியோ டி ஜெனீரோவில் நடைபெற்றுவரும் ரியோ-2016 ஒலிம்பிக்கில் இதுவரை நடைபெற்று முடிந்த போட்டிகளின் அடிப்படையில் பதக்கப் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது.இதுவரை நடைபெற்ற போட்டிகளின் படி, அமெரிக்கா 3 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 12 பதக்கங்களை பெற்று முதலாம் இடத்தில் உள்ளது.சீனா, 3 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் அடங்களாக 8 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்திலும், 3 தங்கம், 3 வெண்கலம் அடங்களாக 6 பதக்கங்களுடன் அவுஸ்திரேலியா மூன்றாவது இடத்திலும் காணப்படுகிறது.இத்தாலி, 2 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் அடங்களாக 7 பதக்கங்களும் நான்காவது இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 09th AUGUST 2016